
# ஞானச்சுடர்

ஐப்பசி 2024

322ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**


**பொருள் :** தமக்கு இன்பம் தருகின்ற கல்வியைத் தம் வாயிலாகப் பிறர் கேட்டு இன்பமடைதலைக் கண்டு கற்றவர் இன்பம் அடைவர். (399)

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

**பொருள் :** ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வமாவது கல்வி; அஃது அல்லாத மணியும் பொன்னும் செல்வமாகமாட்டா. (400)

---

# நற்சிந்தனை



*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**கும்மி**

பாம்பும் புலியும் பார்த்திருந் தாரடி
பாரளந் தோனயன் பாடுபட் டாரடி
நாம்பு கழ்ந்திட நற்றரு ணமடி
நங்கைய ரேகும்மி பாடுமடி 07

மாறிப் புலன்வழி போகா தேயடி
மதிக்குள் ளேரவி சேர்த்திடடி
ஆறியிருந்து பாரடி பெணணே
அவனை நீகண்டு தேறடி 08

சித்தத்துள் நித்தந் தித்திக்குந் தேனடி
தீராப் பிணியைத் தீர்க்கும் மருந்தடி
பத்தர்கள் கண்டு பரவு வாரடி
பாவைய ரேகும்மி பாடுமடி 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்



வெளியீடு - 3 சுடர் - 322

2024 ஐப்பசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சான்றாதாரங்களும்... | இராம ஜெயபாலன் | 01 - 06 |
| எந்த வரம் வேண்டி... | எம்.பி. அருளானந்தன் | 07 - 08 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 09 - 11 |
| திருநீலகண்ட நாயனார் | வி. செல்வரத்தினம் | 12 - 13 |
| அன்னை மொழியைப்... | முருகவே பரமநாதன் | 14 - 17 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 18 - 19 |
| கண்ணபரமாத்மாவின்... | இ. ஸ்ரீதரன் | 20 - 22 |
| உயிரோம்புதல் நலம் | கு. சோமசுந்தரம் | 23 - 26 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 27 - 30 |
| இறைவன் உறையும்... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 31 - 32 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 33 - 39 |
| வடமராட்சி மண்ணில்... | இ. இராகவன் | 40 - 42 |
| கந்தபுராணம் | செ. சிவபாதம் | 43 - 46 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தில்... | க. கைலைநாதன் | 47 - 48 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**
**சந்நிதியான் ஆச்சிரம**
**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
**தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406**
**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர் புரட்டாதி மாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:

புரட்டாதி மாத ஞானச்சுடர் 321ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும், பேரவையின் செயற்பாட்டு உறுப்பினராகவும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியராகவும் உள்ள திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் ஆற்றினார்கள்.

அவர் தமது உரையின்மூலம் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பல பணிகளை விதந்துரைத்ததோடு இப் பணிகளை வெற்றிகரமாகவும் வியப்புக்குரியதாகவும் மற்றவர்கள் போற்றும்படியாகவும் செயற்படுத்துவதன் ஊடாக சந்நிதியானது பேரருள் எவ்வளவு தூரம் ஆச்சிரமத்தில் வியாபித்துள்ளது என்பதை நாம் அனைவரும் உணரக்கூடியதாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

மேலும் மாதாந்த மலராக ஒரு ஆன்மீக மலர் எந்தவிதமான விளம்பரங்களும் அற்ற நிலையில் மாதம் தவறாது வெளிவந்துகொண்டிருப்பது அம் மலரை மாதந்தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தாதாரர்களாக பெற்றுக்கொள்ளும் அதிகளவான வாசகர்கள் அளிக்கும் உற்சாகமே இம் மலர் வெளியீட்டுக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது.

இவ்வகையில் இம் மலருக்கு தொடராகவும் தனித்தனியாகவும் ஆக்கங்களை வழங்கிக்கொண்டிருக்கும் அன்பர்களையும் நாம் பாராட்டியே ஆகவேண்டும். ஏனெனில் கட்டுரையின் தரம் மேலோட்டமாக இருந்தாலும் ஆழமாக இருந்தாலும் மனம் தளரா வகையில் மலரில் தத்தமது ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்ற பேரவாவின்மூலம் மலரின் வெளியீட்டை காத்திரமானதாக நடாத்திச் செல்வதற்கு ஒரு உந்துசக்தியாக விளங்குகின்றது என்று கூறி மலரில் இடம்பெற்ற ஒரு சில ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக்கூறியதோடு தனது வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப்பணிகளின் வரிசையில்,

யா/ பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு 230,000 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

புலோலி தென்மேற்கு மூத்தோர் சங்கத்தினருக்கு முதியோர் தினத்தை முன்னிட்டு 60,000 ரூபா பெறுமதியான 300 கிலோ அரிசியும் 25,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் (யாழ்ப்பாணம்) முதியோர் தினத்தை முன்னிட்டு 50,000 ரூபா பெறுமதியான 25 சாரம், 25 சாறி வழங்கப்பட்டன.

மூல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நிர்மானிக்கப்பட்டுவரும் விநாயகர் ஆலய கட்டிடப் பணிக்காக 500,000 ரூபா நிதி ஆலய நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

## அமரர் ஆகிவிட்டார் சின்னத்துரை அருளானந்தம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிட மாகவும் கொண்ட அமரர் சின்னத்துரை அருளானந்தம் அவர்கள் கடந்த 27.09.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவனடி சேர்ந்தார்.



அமரர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் தன்னால் இயன்ற பலவிதமான அறப்பணிகளில் தன்னை இணைத் துக்கொண்டு பெரும் சேவையாற்றிய பெருமகனாவார். நாம் அடியார்களோடு கதிர்காமம் செல்லும் காலங்களில் எல்லாம் எம்மை வரவேற்று எமது தேவைகளை சீர் செய்த ஒரு அன்பர் ஆவார்.

குறிப்பாக தெய்வானை அம்மன் ஆலயத்தில் நடாத்தப்படும் அன்னதானப் பணியில் தானும் ஒருவராக நின்று அச்சேவையை தொய்வு ஏற்படாத வண்ணம் திறம்பட நடத்தியவர். அவரது மறைவு சைவசமயம் சார்ந்த அனைவருக்கும் ஓர் பேரிழப்பாகவே இருக் கின்றது. அமரரின் ஆத்மா சாந்திபெற கதிர்காம வேலவனை வேண்டி நிறைவு செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நமது சமுதாயத்தில் இளம் சமுதாயத்தினர் நல்ல பழக்கவழக்கங்களுடன் நல்ல பிள்ளைகளாக நல்ல சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு முத்தோரின் பங்கு காத்திரமானது. நமது வீடுகளில் உள்ள ஒவ்வொரு வயது வந்தவர்களும் தமது பிள்ளைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களை கைக்கொள்ள பழக்கியிருக்க வேண்டும். அவ்வாறு நல்ல பழக்கவழக்கங்களை எடுத்துரைத்து பிள்ளைகளை வளர்த்திருந்தால் முதியோர் இல்லங்கள் தோன்றியிருக்க வாய்ப்பிருக்காது.

தற்கால சூழ்நிலைகளின் நிமித்தம் எவ்வளவோ பெற்றோர்கள் தாமாக விரும்பியோ விரும்பாமலோ பிள்ளைகளை நாடு கடந்து அனுப்பிவிட்டு தாம் பல்வேறு துக்கங்களை அனுபவிக்கிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட துக்கங்களின் பயனாக மனதால் மிகவும் நொந்து கஸ்டப்படுகிறார்கள். அம் முதியவர்கள் முன்னைய கால அனுபவ சாலிகள். அவர்கள் எல்லாச் செயல்களையும் கூர்ந்து அவதானித்து செயலாற்றக் கூடியவர்கள். அவர்கள் மேற்கொள்ளும் செயல்கள் யாவுமே காரண காரியமாகத்தான் அமைந்திருக்கும். ஆனால் இன்றைய இளம் சமுதாயத்தினர் அவர்களை மதியாது பல துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆகவே இளம் பிள்ளைகளாகிய நாம் எடுத்த கருமத்தை முடிக்கும் வலிமையுடையவர்களின் ஆற்றலை அவமதித்து நடத்தலாகாது. பெரிய மலைபோன்ற பெருமையுடைய ஒருவன் நிலைபெற்ற செல்வமுடையவனாயினும் அவன் வயது முத்தோர் சொல் கேளாது நடப்பானாயின் அவன் குடும்பத்தோடு அழிந்து விடுவான் என்பதனை திருவள்ளுவர்,

குன்றன்னர் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து

என்ற திருக்குறள்மூலம் விளக்கிக் கூறுகின்றார்.

ஆகவே சிறியோர்களாகிய நாம் அனைவருமே ஒழுக்க நெறிமுறைகளை அறிந்த சிறந்த அறிவுடையவரை தமக்குத் துணையாக கொண்டு எமக்கு ஏற்படும் துன்பங்களை நீக்கும் வழியறிந்து நீக்கியபின்பு அவ்வகை துன்பங்கள் வராதபடி முன்னறிந்து காக்கவல்ல தன்மையுடைய முதியோர்களை அவர்கள் விரும்புவன செய்து எமது செயல்களுக்கு குருவாகக் கொண்டு வாழ்க்கையை சிறந்ததாக அமைப்போமாக.

**கந்தசஷ்டி விரதம்**

**02.11.2024 சனிக்கிழமை ஆரம்பம்**

**07.11.2024 வியாழக்கிழமை சூரன்போர்**

**08.11.2024 வெள்ளிக்கிழமை பாரணை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. சண்முகராஜா**
(லண்டன்)

**M. சதாசிவமூர்த்தி**
(கனடா)

**சி. மகேஸ்வரன்**
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர்)

**செ. ஞானசபேசன்**
(கிராம அலுவலர், ஏழாலை)

**சி. உதயகுமார்**
(கிராம அலுவலர், கைதடி)

**தலைவர்**
(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

**தி. இரவீந்திரநாதன்**
(அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

**திருமதி கமலாம்பிகை ஸ்ரீஸ்கந்தராசா**
(சுண்ணாகம்)

**ம. குகதாசன்**
(வரணி)

**K. சீவரெட்ணம்**
(யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**
(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

**செ. ரவிசாந்**
(குப்பிளான்)

**S. தங்கசிவம்**
(யாழ்ப்பாணம்)

**இ. விக்னேஸ்வரமூர்த்தி**
(கொற்றாவத்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**S. செல்வராசா (செல்வி)**
(சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி)

**மு. அப்புலிங்கம்**
(கோண்டாவில் கிழக்கு)

**திருமதி ப. சொக்கநாதன்**
(கொக்குவில்)

**ந. சிவக்குமார்**
(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)

**திருமதி சசிலேகா ஜெயராஜன்**
(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)

**ப. தியாகராஜசர்மா**
(திருமகள் வாசா, ஆவரங்கால்)

**மகாலிங்கம் செல்வமணி**
(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)

**K. முகுந்தன்**
(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)

**நா. நாகராசா**
(பக்கிஸ்லேன், மானிப்பாய்)

**ந. மணிவண்ணன்**
(இரும்புமதவடி, வதிரி)

**இராதாகிருஷ்ணன் கிரிதரன்**
(தம்பலடி, பொலிகண்டி)

**இ. ஜெயபாலன்**
(உடுப்பிட்டி)

**நவரத்தினம் இந்திரமோகன்**
(சண்டிலிப்பாய் மேற்கு)

**திருமதி சிவநிதி முருகானந்தன்**
(கட்டுடை, மானிப்பாய்)

**இராசரத்தினம் வேல்குமார்**
(இணுவில்வீதி, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபாநாதன் தனேஷன்**

(யாழ்வீதி, மானிப்பாய்)

**M. செந்தூரன்**

(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

**க. முருகானந்தம்**

(காளிகோவிலடி, மல்லாகம்)

**த. சொக்கலிங்கம்**

(இணுவில் தென்மேற்கு)

**பா. சியாமளநாயகி**

(சுண்ணாகம் கிழக்கு)

**கிட்டிணன் ஜெயக்குமார்**

(சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு)

**கு. ஜெகதீஸ்வரன்**

(இராசவீதி, கோப்பாய் வடக்கு)

**கி. ஜெயக்குமரபதி**

(இடைக்காடு, அச்சுவேலி)

**க. துரைராசா**

(சுதுமலை தெற்கு)

**அருச்சுனன் சுனோஜா**

(தும்பளை தெற்கு)

**சி. புஸ்பரதி**

(கரணவாய் மத்தி)

**இ. சிவபாதம்**

(நீலமயில் வாசா, அல்வாய்)

**வ. கனகன் சின்னத்தம்பி**

(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)

**வே. முருகவேள்**

(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

**க. சத்தியதாஸ்**

(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வ. இராசநாயகம்**

(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)

**ரூபினி வசந்தகுமார்**

(யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)

**விக்னேஸ்வரி கணேசநாதன்**

(நீர்வேலி)

**சி. பத்மராசா**

(நவிண்டில், கரணவாய்)

**T.R. இரத்தினவேல்**

(அரசவீதி, உரும்பராய்)

**A. முரளிகரன்**

(ஊரெழு)

**பா. இந்துராணி**

(மல்ரி ஓயில், இணுவில்)

**சு. சுந்தரலிங்கம்**

(வேவில் லேன், வல்வெட்டி)

**வீ. வடிவேலு**

(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

**Dr தர்மலிங்கம்**

(நீர்வேலி)

**சிவலிங்கம் சுகந்திகா**

(ஆதியாமலை, உடுப்பிட்டி)

**த. கனகம்**

(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

**நாகமுத்து செல்வராசா**

(மானிப்பாய்)

**செ. இராசநாயகம்**

(அல்வாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றாதாரங்களும் சந்நிதியானும்

**– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –**

நாம் கொண்டிருக்கின்ற கருத்து சரியானது அல்லது உண்மையானது என நிருபிக்கப் பயன்படுவதே சான்றாதாரங்கள் என அழைக்கப்படுகின்றது. உதாரணம் இந்தப் பூமி, சூரியனில் இருந்து பிரிந்து குளிர்வடைந்தே உயிரினங்கள் வாழக்கூடியதாக உருவானது என்பதற்கு சான்றாதாரமாக பூமியின் மையப்பகுதியில் நெருப்புக் குளம்பு காணப்படுகின்றது. எனவே இறைவன் இயற்கையில் கூட சான்றாதாரங்களை வைத்து படைப்பையும் பரிணாமத்தையும் ஆதாரப்படுத்துகின்றான். எனவே இறைவனுக்குக்கூட மனிதனை நம்ப வைப்பதற்கு சான்றாதாரங்கள் தேவைப்பட்டு இருக்கின்றது. தவிர இறைவன் மனிதர்களை முழுமைப்படுத்தப்பட்ட உடல் அமைப்புடனும் முழுமைப்படுத்தப்பட்ட அறிவுடனும் படைத்து வேதப் புத்தகத்தையும் கையில் கொடுத்து எந்தப் பிணக்குகளும் இல்லாது வாழுங்கள் எனச் செய்துவிடவில்லை. மாறாக படைப்புக்களை பரிணாமத்தால் படைத்து சான்றாதாரங்களையும், படைப்பில் வைத்து தவிர மனிதர்களைக்கூட பரிணாமத்தால் உருவாக வைத்து மற்றும் மனிதர்களது மொழியறிவியல்களையும் பரிணாமத்தால் உருவாக வைத்து சான்றாதாரங்களையும் கூட பாதுகாக்கவும் தூண்டி அனைத்தையும் ஆவணப்படுத்தவும் செய்தாலும் மனிதர்களின் அறிதல்களிலும் அறிவிப்புக்களிலும்கூட முரண்பாடுகளும் பரிணாமங்களும் காணப்படுவதால், அந்தந்த காலங்களுக்கு ஏற்பவே அறிதல்களும் அறிவித்தல்களும்கூட இடம்பெற்றும் வந்தும் இருக்கின்றது. இதனால் அறிவியல்கள் பன்முகத்தன்மை வாய்ந்தவையாகவும் திகழ்கின்றது. முரண்பாடுகளும் காணப்படுகின்றது. தவிர மதங்களின் ஆட்சிக்காலத்தில் அனைத்து அறிவியல்களும் ஒருங்கிணைக்கப்பட்டே இருந்தன. இதனால் அறிவியல் மற்றும் சித்தாந்த புரட்சிகள் ஏற்படுகின்றபோது புதிய மதங்கள் தோன்றின. ஆனால் அறிவியல்கள் மதம் கடந்து உருவாகி வளர்ச்சியடைந்த பிற்பாடே துறைசார்ந்தவையாக அறிவியல் உருவானது. மதம்கூட ஒரு தனித்துறையானது.

ஆனால் இந்து மதம் அனைத்து மதங்களுக்கு மட்டுமல்ல, அனைத்து அறிவியல்களுக்கும் தாய்வீடாக இருக்கின்றது. தவிர அனைத்து இன்றைய அறிவியல்களுக்கு அடிப்படைகளும் எமது வாழ்வியலிலும் வழிபாடுகளிலும்கூட காணப்படுகின்றது. தவிர அதற்கான சான்றாதாரங்களும் காணப்படுகின்றது. இவைகளைக் கொண்டு அனைத்து துறைகளையும் இணைத்து முரண்பாடுகள் அற்ற ஒரு வரைபை சொல்ல முனைவதுதான் இக் கட்டுரையின் நோக்கம்.

மண்ணில் இருந்து மனிதனை கடவுள் படைத்தார் என உலகறிந்த மதங்கள் சொல்கின்றன. குரங்கில் இருந்து மனிதன் கூர்ப்படைந்தான் என உடல் அமைப்பின் சான்றாதாரங்களைக் கொண்டு முன்வைக்கப்பட்டமையால் உலகம் அந்தக் கருத்தை நம்பத் தொடங்கியது. ஆனாலும் மத நம்பிக்கைகள் உலகில் இருந்து அழிந்துவிடவில்லை.

*நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே சமயம் விஞ்ஞானம் என்று இரண்டு துறைகள் உருவானது. எவ்வாறாயினும் குரங்கில் இருந்து மனிதன் கூர்ப்படைந்து உருவானான் என்ற கருத்தை முன்வைத்த டியானோவோ டாவின்ஸி காலத்தில் மரபணுபற்றிய அறிவுகள் இருந்திருக்கவில்லை. வெறும் உடலமைப்பு மட்டுமல்ல உயிரினங்கள் மாறாக அவற்றின் ஆற்றல் அறிவுகள் மூளையின் செயற்பாட்டிலும் மூளையின் பரிணாம வளர்ச்சியிலும் அவை தங்கியிருந்தன. தவிர மரபணுக்களே ஒவ்வொரு உயிரினங்களின் உடலமைப்பை மட்டுமல்ல அவை சராசரி வாழும் காலம் அவை இயங்குவதற்கான ஆற்றல் அறிவுகளை பொதுவான இன அடையாளங்களைத் தாண்டி தனியான தீர்மானங்களும் மரபணுவில் காணப்படுகின்றது. உதாரணம் ஒருவருடைய மரபணு அவரது நெருங்கிய உறவினர்களுடன் ஒத்துப்போனாலும் எவ்வாறு ஒரு கைவிரல் அடையாளம் தனித்துவமானதோ அதுபோல் மரபணுவில் தனித்துவமான அம்சங்களும் இருக்கின்றது. எனவே, இவை இறைவனால் திட்டமிடப்பட்டவை என இன்று நம்புவதற்கும் இன்றைய அதி பிந்திய நவீன அறிவியல்களே காரணங்களாகும்.

இவ்வாறு மண்ணில் இருந்து மனிதன் படைக்கப்பட்டான் என மதங்கள் சொன்னாலும் மனிதனுடைய உடல் தனித்த மண் என்ற மூலப் பொருளால் மட்டும் ஆகிவிடவில்லை. பஞ்ச பூதங்களாலும் ஆகியிருக்கின்றது. எனவேதான் இயற்கையில் உள்ள பஞ்ச பூதங்களும் இயங்கினாலேயே மனிதனால் மட்டுமல்ல உயிரினங்களாலும் கூட இயங்க முடியும். இங்கே மண் என மதங்கள் சொன்னது நாம் வாழும் பூமியையாகும். காரணம் பஞ்ச பூதங்களும் பூமியில் காணப்படுகின்றது. அதாவது பூமியில் மண் காணப்படுகின்றது தவிர மண்களுக் கிடையே வெற்றிடம் (ஆகாயம்) காணப்படுவதால் காற்றும் நீரும்கூட மண்களுக்கிடையே காணப்படுகின்றது. தவிர பூமியின் மத்திய பகுதியில் நெருப்புக் குளம்பும் காணப்படுகின்றது.

மனிதன் உயிர் வாழ்வதற்கு காற்றையும் நீரையும் நேரடியாக பஞ்ச பூதங்களில் இருந்து நுகர்கின்றான். மண்ணில் உள்ள கனிமங்களை நீரின்மூலம் பகுதியாகவும் சூரிய ஒளியில் இருந்து புற வெப்பநிலைகளையும் ஒரு சில சத்துக்களையும் மனிதனால் பெற முடிந்தாலும் தாவரங்கள்போல் மனிதனால் முழுமையாக பஞ்ச பூதங்களில் இருந்து முழுமையான சக்தியைப் பெற முடியாமையினால் மீதம் உள்ள தேவைகளை, தாவரங் களையோ, தாவரங்களை உண்ணும் உயிரினங்களையோ உணவாகக் கொண்டே பெற்றுக் கொள்கின்றான். எனவே பஞ்சபூதங்கள் சீராக இயங்கி, உயிரினங்கள் வாழ்ந்தாலேயே மனிதனாலும் உயிர் வாழவும் முடியும்.

எனவே இறைவன் அணுக்களைத் தனித்தனியாக உருவாகச் செய்து அவை பஞ்ச பூதங்களாக உருவாகி, பஞ்ச பூதங்களில் இருந்து அனைத்து உயிர்களுக்கும் பொதுக் கட்டமைப்பாக இருக்கும் உயிர் கலங்களை உருவாகச் செய்து உயிர்கலங்களில் இருந்து பல்லுயிர்களை உருவாகச் செய்து மேலும் உயிரினங்களை மரபணுக்கள் மூலம் தனித்துவ மாக்கி, மரபணுக்களை அடிப்படையாகக் கொண்டு உயிரினங்களை தொடராக பிறந்து இறக்கவும் செய்ததுபோல் மனிதர்களை தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கக் கூடியதாக செய்தாலும் மனிதர்களைப் பல சந்ததிகள் ஊடாகப் பிறக்க வைத்து மரபணுக்களை

*உழைப்புக்கு பலன் மெதுவாகக் கிடைத்தாலும் அது என்றுமே உயர்வானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமாகவும் உருவாகவும் செய்தார். உதாரணம் ஒருவருடைய மரபணு அவருடைய நெருங்கிய உறவினர்களுடன் ஒத்துப்போனாலும்கூட, எவ்வாறு ஒருவருடைய கைவிரல் அடையாளம் தனித்துவமானதோ, அவ்வாறு படைப்பின் விதியாக இறைவனே தீர்மானிக்கின்றார்.

**இயக்கங்கள்**

உயிரினங்கள் பஞ்சபூதங்களால் உருவானமையால் பஞ்சபூதங்களின் இயக்கமே உயிரினங்களை உறுதிசெய்கின்றது. எனவே சித்த மருத்துவத்துறையில் நோய்களுக்கு மருத்துவம் பஞ்சபூதங்களின் இயக்கங்களைக் கணித்தறிந்தே செய்யப்படுகின்றது. தவிர காலங்களைக் கொண்டு மரபணுக்களின் இயல்பை ஜாதகங்களில் கிரக நிலைகளைக் கொண்டு கணித்தறியும் முறைகளும் இன்றைய நவீன மரபணுச் சிகிச்சை முறைகளுக்கு முன்னோடியாக இருந்தும் இருக்கின்றது. எவ்வாறாயினும் பஞ்ச பூதங்கள் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் விரவியதாக இல்லை. முக்கியமாக காற்றும் நீரும் பூமியில்தான் காணப்படுகின்றது. எனவே நடராஜர் தத்துவம் பஞ்ச பூதங்களின் இயக்கங்களை அறிவதற்கான காலச்சக்கரமாகவே பயன்பட்டது. மேலும் இவை மொழியறிவியல் பரிணாமங்களுக்கும் அடிப்படைகளாக இருக்கின்றது. தவிர ஆன்மீகம் சம்பந்தப்பட்டும் இருக்கின்றது.

எவ்வாறாயினும் இறைவன் இயக்கங்களை சுயமாகவும் அதன் கால ஓட்டத்திலும் விதியாகவுமே இயங்கச் செய்துள்ளான். உதாரணம் ஒரு மனிதன் அவனது மரபணுவை அடிப்படையாகக் கொண்டே, பிறந்து வாழ்ந்து இறக்கின்றான். மேலும் அவனது உடல் மரபணுவின் தீர்மானங்களுக்கமைவாக சுயமாகவே, இயங்குகின்றது. இவ்வாறு மனித உடல் சுயமாக இயங்குவதாலேயே உடல் இயக்கங்களைக் கணித்து அறியக்கூடியதாகவும் மருத்துவங்கள் செய்யக்கூடியதாகவும் முக்கியமாக இருதய மாற்றுச் சத்திர சிகிச்சைகளைக் கூட செய்ய முடிகின்றது.

இவ்வாறே இந்தப் பிரபஞ்சத்தில் ஒவ்வொரு சூரிய குடும்பங்களும் சுயமாகவும் அவைக்கு இறைவனால் விதிக்கப்பட்ட கால எல்லைகளை அடிப்படையாகக் கொண்டே இயங்குவதால் இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கங்களையும் மனிதனால் கணித்தறியவும் முடிகின்றது. செயற்கை கோள்களையும் விண்ணில் ஏவவும் முடிகின்றது.

**வாழ்வியலும் வழிபாடுகளும்**

மனிதனது மொழியறிவியல்களின் பரிணாமங்கள் ஆன்மீகம் சார்ந்து உருவானமையால் இவற்றுக்கான சான்றாதாரங்கள் ஆன்மீக ஆலயம் சார்ந்தே பாதுகாக்கப்பட்டன. முக்கியமாக பேச்சு மொழி இயல் இசை நாடகமாகவும் எழுத்து மொழி சித்திரம் ஓவியம் சிற்பமாகவுமே பரிணாம வளர்ச்சியடைந்தது (குறிப்பு: ஞான்ச்சுடர் சஞ்சிகையிலே என்னால் எழுதி வெளிவந்த மொழியும் வழியும் மற்றும் இயங்கும் இயக்கமே இறைவன் என்னும் கட்டுரைகளில் இவை தெளிவாக உள்ளது.) இவ்வாறு பரிணாமமடைந்த மொழியறிவியல்களே

*உன் விதியை நீயே நிர்ணயம் செய். இல்லையென்றால் மற்றவர்கள் நிர்ணயித்து விடுவார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவ வழிபாடுகளும் கிரிகை வழிபாடுகளும் உருவாகக் காரணங்களாகும். தவிர மனித வாழ்வியல் பரிணாமங்களும் ஆன்மீக ஆலயம் சார்ந்தே சான்றாதாரங்கள் பாதுகாக்கவும் பட்டன. ஆனாலும் இந்தச் சான்றாதாரங்கள் மனிதர்களின் ஏற்றத் தாழ்வுகளைப் பாதுகாப்ப தாகவும் அமைந்தது.

### வேதங்கள்

மனித வாழ்வியல் பரிணாமங்களும் மொழியறிவியல் பரிணாமங்களும் ஏற்றத்தாழ்வு களுக்கும் முரண்பாடுகளுக்கும் காரணங்களாக அமைந்தமையால் முக்கியமாக உருவ வழிபாடுகளும் கிரிகைகளும் எந்தெந்த காலகட்டத்தில் அந்த ஆன்ம சக்திகள் வாழ்ந் தனவோ, அந்தந்த ஆன்ம சக்திகளின் விருப்பு வெறுப்புக்களையும் அறிவு அறியாமை களையும் சான்றாதாரங்கள் பிரதிபலிக்க செய்தமையால் மனிதர்களிடையே ஏற்பட்ட வாழ்வியல் முரண்பாடுகளையும் வழிபாட்டு முரண்பாடுகளையும் அழித்தொழித்து, உருவமற்ற இறைவனை முதன்மைப்படுத்தி உருவானதுதான் வேத ஆட்சிகள்.

வேதங்களே உலகின் முதல் அரசியல் அமைப்பாகவும், அறிவியல் தொகுப்பாகவும், அரசர்கள் முதல் ஆண்டிவரை சுய தேடல் அறிவுகளை கட்டுப்படுத்தி மட்டுப்படுத்தி, சட்டங் களுக்கு கட்டுப்படவும், அறிவியல்களுக்கு கட்டுப்பட்டு வாழவும் செய்தன. ஆனாலும் இயற்கை யின் இயல்பு முரண்பாடுகள் என்பதால் உலகம் இரண்டுபட்டது. வேதங்களை ஏற்றுக் கொண்டவர்கள், மற்றும் ஏற்றுக்கொள்ளாது சுதந்திரமாக வாழ்பவர்கள் என பிரிந்திருந்து புரட்சிகள் ஏற்பட்டு வேத ஆட்சிகள் முடிவுக்கு வந்ததுடன் இந்த வரலாறுகள் புராண இதிகாசங்களாக பதிவு செய்யப்பட்டதுடன் வேதங்கள் ஆகமங்கள் எனவும் அவைகளும் தெய்வீக அருளால் ஆவணப்படுத்தவும்பட்டன. தவிர சிலை வழிபாடுகளும் கிரியை முறைகளும் மீண்டும் உருவானது.

### மறுசமயங்கள்

இயற்கையின் நிலையில்லாமை மற்றும் மனித முரண்பாடுகள் காரணமாக இடம் பெறும் யுத்தங்களும், பிணி மூப்பு மரணம் காரணமாக இடம்பெறும் நிலையில்லாமையால் இம்மை மறுமை இரண்டிலுமே வெறுப்படைந்து அதாவது வணக்க வழிபாடுகளை வெறுத்து ஒதுக்கி துறவறத்தின் மூலமும் தியானத்தின் மூலமும் தமக்குள் இறைவனைக் கண்டு, தாமே இறைநிலையை அடைவதை அடிப்படையாகக் கொண்டு உருவான மறு சமயங் களாலும் பரிணாமங்களின் சான்றாதாரங்கள் அழிக்கப்பட்டாலும், புதிய வடிவில் இவையும் சான்றாதாரங்களாக வணக்க வழிபாடுகளுடன் இணைந்து கொண்டது.

இதனைத் தொடர்ந்து புதிய மதங்கள் உருவானது. இலங்கைத்தீவு கீழைத் தேசத்துக்கு வர்த்தகம் செய்ய வருபவர்கள் தங்கிச் செல்லும் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடமாக இருந்தமையாலும் தவிர மனித இனத்தோற்றம் இலங்கைத் தீவிலேயே உருவானதாக அவர்களிடம் காணப்பட்ட நம்பிக்கை காரணமாகவும் முகலாயர்கள் உலக

*வெளிச்சத்தில் தனியாக நடப்பதைவிட இருளில் ஒரு நண்பரின் துணையோடு நடப்பது சிறந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லரசர்களாக இருந்த காலத்தில் தமிழ் அரசர்களுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து இலங்கைத் தீவில் தமது படைவீரர்களை நிறுத்தும் உரிமையைப் பெற்றுக்கொண்டார்கள். இதன் காரணமாகவும் உருவ வழிபாடுகளும் மற்றும் பரிணாமங்களின் சான்றாதாரங்களும் அழிக்கப்பட்டாலும் ஆரியச் சக்கரவர்த்திகளின் வருகையுடனும் மீண்டும் பாரம்பரிய வழிபாட்டு முறைகள் உருவானதும் சான்றாதாரங்களைப் பாதுகாக்கும் இயற்கையின் இயல்பு காரண மாகவும் இந்த வரலாற்றுக்கான சான்றாதாரங்கள் இன்றுவரை பாதுகாக்கவும்படுகின்றது.

இவ்வாறு சான்றாதார அழிவுகள் யுத்தங்களாலும் ஆக்கிரமிப்புக்களாலும் மட்டுமல்ல ஒரு ஆலயம் இடித்துக் கும்பாபிஷேகம் செய்யும்போதும் சான்றாதாரங்கள் அழிக்கப்படு கின்றன. இந்த வகையில் நல்லூர் முருகன் தனது ஆலயத்தை இடித்துக் கட்டுவதற்கு அனுமதி தருவதில்லை. இதனால் இஸ்லாமியச் சித்தர் ஒருவரின் சமாதி மூலஸ்தானத்திற்கு அருகில் காணப்படுகின்றது. கதிர்காமத்திலும் முருக வழிபாடுகளில் மத நல்லிணக்கம் காணப்படுகின்றது. செல்வச்சந்நிதி தீர்த்த திருவிழாவிலும் மத நல்லிணக்க சான்றாதாரங்கள் வழிபாட்டு முறையில் பிரதிபலிக்கின்றது. எனவே முருக வழிபாடு பல்வேறு சான்றாதாரங் களைப் பாதுகாக்கின்றது.

மேலும் அந்நியர் ஆட்சிக்காலத்தில் நீராவியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு, கண்டிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து நெடுஞ் சாலைகள் அமைக்கப்பட்டன. இதனால் இலங்கையின் மத்திய பிரதேசத்தினூடாக போக்கு வரத்துக்கள் இடம்பெறக்கூடியதாக வந்தது. தவிர நீராவியியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு கப்பல் போக்குவரத்து இலகுபடுத்தப்பட முன்னர் பாய்மரக் கப்பல்களும் தரைவழிப் போக்குவரத்துக்கு மாட்டுவண்டிகளுமே பயன்படுத்தப்பட்டது. இதனால் காற்றுக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையைச் சூழவும் பல துறைமுகங்கள் இருந்தன. தவிர துறைமுகங்களை அண்டியே நகரங்களும் அரசாட்சிகளும் இருந்தன. முக்கியமாக கண்டி இராட்சியத்திற்கு புத்தளம் சிலாபம் ஊடாகவும் குருநாகல் வழியாகவும், அநுராதபுரத்துக்கு மன்னார், செட்டிக்குளம் வழியாகவும் யாழ்ப்பாணத்திற்கு கொழும்புத்துறை, ஊர்காவற்துறை, மாதகல்துறை, காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறையூடாகவும் இருந்தன. மேலும் தமிழ்நாட்டை நாயக்கர்கள் ஆண்ட காலத்திலும் இலங்கையில் நாயக்கர்களின் ஆட்சியிருந்த காலத்திலும் கூட, இலங்கை கரையோரம் பல தமிழ் குறுநில மன்னர்களின் கட்டுப்பாட்டிலும் இருந்தது.

மேலும் இலங்கையின் மத்திய பகுதி அடர்ந்த காடாக இருந்தமையால் போக்குவரத் துக்கள் கடற்கரையை அண்டியே இருந்தன. இதனால் தொன்மையான முருகன் ஆலயங்கள் கடற்கரை அண்டியே இருந்தன. அதாவது சுழிபுரம் பறாளை முருகன், மாதகல் நுணசை முருகன், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கந்தவனக்கடவை கல்யாண வேலவர் என யாழ் மாவட்டத்தில் பழைமையான ஆலயங்கள் கடற்கரையை அண்டியே இருந்தாலும் மருதர் கதிர்காமருக்கு அருள்புரிந்து தன்னைப் புதுப்பித்துக்கொண்ட சந்நிதியானும் மயில்வாகனம் சுவாமிகளின் சீடராகி சந்நிதியான் ஆச்சிரமத்தை நிறுவிய கலாநிதி செ. மோகனதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி அனுசரணையுடன் பாதுகாக்கப்படுகின்ற செல்வச்சந்நிதி கதிர்காமம் பாத யாத்திரை வரலாற்றுக்கான முக்கிய அருள் சான்றாதாரங்களாகும். மேலும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையும் ஞானச்சுடர் வெளியீடும், வரலாறுகளைத் தேடவும் எழுதவும் முருகன் அருளால் இடம்பெற்ற சான்றாதாரமாகும். மேலும் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் மத இன மொழி மற்றும் சாதிகள் கடந்து அனைவரையும் அரவணைத்தும், சேவைகள் செய்வதும் முருகனருளின் முக்கிய அருள் சான்றாதாரங்களாகும்.

## ஆன்மீகமும் அறநெறிகளும்

படைத்த இறைவனுக்கு உருவமும் இல்லை. உருவ வழிபாடும் இல்லை என்பதை கருப்பொருளாகக் கொண்டே படைப்புக் கடவுளான பிரம்மனுக்கு கோவில் இல்லை. பிராமணர்கள் பிரம்மனின் வழிவந்தவர்கள் என்பதால் பிராமணர்களால் வணக்க வழிபாடுகள் செய்யப்படும் கடவுளர்கள் பிராமணர்களுடையவர்கள் அல்ல என்பது பொதுப் பண்பேயாகும். ஆனாலும் பிராமணர்கள் பல்வேறு பாரம்பரியங்களில் இருந்து வந்தவர்கள் என்பதற்கு சான்றாதாரங்கள் அறுபத்து நான்கு கோத்திரங்கள் ஆகும்.

முருகன் பிரம்மனைச் சிறையில் இட்டான் என்கின்ற புராணக்கதை முருகன் பிராமணர்கள் அல்லோதாரால் பூசை வழிபாடுகள் செய்யப்படுவதற்கு புராணச் சான்றாதாரமாக இருந்தாலும், முருகன் மட்டுமல்ல மற்றைய எல்லாத் தெய்வங்களுமே பிராமணர்கள் அல்லோதாராலும் பூசை வழிபாடுகள் செய்யப்படுகின்றன. மேலும் முருகன் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படுகின்ற நாற்பாத வடிவில் வடிவம் தாங்கி முறையே அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோரின் உருவ ஒற்றுமையில் காட்சி தருவதுடன் மட்டுமல்ல, செல்வச்சந்நிதியிலும், மாவிட்டபுரத்திலும், நல்லூரிலும், கதிர் காமத்திலும் நாற்பாத வடிவில் காட்சியும் தருகின்றான். இது முருகனுடைய தனித்துவங் களையும் செல்வச்சந்நிதியில் தினமும் அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கு அமுது படைத்து பூசை வழிபாடுகள் செய்யப்படுவதும், சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறுகின்ற நாயன் மார்கள் குருபூசையும் இது வேற்றுமைகளில் ஒற்றுமையையும் முருகன் அனைவருக்குமான கடவுள் என்பதற்கும் முருகனுடைய அருள் சான்றாதாரங்களைத் தருகின்றது.

## குறிப்பு:

நான் கற்று துறை சார்ந்து பட்டங்கள் பெற்று எழுதும் ஆய்வுக்கட்டுரை அல்ல. சாதாரணமான எனது அறிவில் இருந்து எனது எழுத்தாற்றலை வளர்த்துக்கொண்டு 1998ஆம் ஆண்டில் இருந்து வெளிவரும் ஞானச்சுடர் சஞ்சிகையில் சிறு சிறு கவிதைகளைத்தான் முதலில் எழுதி வந்தேன். தனித்த ஆன்மீகத் துறை சார்ந்து எழுதும் அனுபவம் அப்போது இருக்கவில்லை. கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளிடம் இருக்கும் பன்முகத் தன்மையை என்னால் அறியமுடிந்தமையே துணிந்து என்னாலும் எழுத முடிந்தது. இதுவும் சந்நிதியான் அருளுக்கு அருள் சான்றாதாரமேயாகும்.

*நல்ல விடயத்தில் மட்டுமே கவனம் செலுத்திவந்தால் மனம் பளிங்குபோல தூய்மையாக இருக்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த வரம் வேண்டி கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கிறோமோ அந்த வரமதை கந்தப்பெருமான் தருவான்

– *திரு காரை எம்.பி. அருளானந்தன்* அவர்கள் –

**கந்தசஷ்டி**

கந்தக் கடவுளை நினைத்து தவமாற்றும் விரதம் மூன்று. அவை வார விரதம் செவ்வாய், வெள்ளி. நட்சத்திர விரதம் கிருத்திகை. திதி விரதம் சஷ்டி. சஷ்டி நோன்பில் இந்த ஆறு நாட்களிலும் மனம், மொழி, மெய்களால் முருகப்பெருமானை மெய்யன்போடு பூசித்து வழிபடுகின்ற தலையாய விரதம் கந்தசஷ்டி விரதமாகும். இந்துக்கள் பெரும் பாலானவர்களால் அனுஷ்டிக்கின்ற விரதமும் இதுதான்.

**சேவலும் மயிலும்**

முருகன் சூரனை சம்ஹரித்த பெருமையைக் கொண்டாடுவதே கந்தசஷ்டி விழாவாகும். இறைவனது கருணை அறக்கருணை, மறக்கருணை என இருவகைப்படும். நல்லவர்களை அறக்கருணையாலும், பொல்லாதவர்களை மறக்கருணையாலும் இறைவன் ஆட்கொள்கிறான். சூரன் அழியாத பல வரங்களைப் பெற்று எல்லோருக்கும் இடுக்கண் புரிந்தான். அவன் மீண்டும் பாவம் செய்யாமல் தடுக்கவும், அவனுக்கு முத்தியளிக்கவும் அவனை இரு கூறாக்கி மயிலும் சேவலுமாக மாற்றினார். முருகன் மயிலைத் தன் வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டார். இதிலிருந்து முருகன் சூரனை மறக்கருணையால் ஆட்கொண்டது வெளிப்படுகின்றது.

**சஷ்டி**

பெற்றோர் தம் பிள்ளைகளிடம் நோய் ஒன்று கண்டாலே தாமே அந்த நோயை மாற்ற வேண்டியதைச் செய்கிறார்கள். கத்தியால் அறுத்தும் கடுந் துன்பம் செய்வித்தும் அதனைப் போக்குகிறார்கள். இந்தச் செயல் அவர்களுக்குப் பிள்ளைகளிடமுள்ள அன்பைக் காட்டுகிறதா? பகைமையைக் காட்டுகிறதா? அன்பையல்லவா காட்டுகிறது. அதுபோல் நம்மிடம் பற்றிய பாவங்களைத் தீர்க்க இறைவன் கருணையால் இம்மாதிரியும் செய்கின்றான்.

இந்த தத்துவார்த்த சிந்தனைகளை உணர்த்த எழுந்ததே கந்தபுராணம். கந்தபுராணக் கடவுள் முருகன் சூரனை சம்ஹரித்த திருநாளே "சஷ்டி". "சஷ்டியிலிருந்தால் அகப்பையில் கிடைக்குமென்பதுகூட" முதுமொழியாகும். இந்த விரத நாட்களை பூரணமாக அனுஷ்டித்து வருகின்றபொழுது நாம் எதை எதை எம்பெருமானிடத்தில் வேண்டுகின்றோமோ அவையவை அப்பொழுது கிடைத்துவிடுகின்றது என்பது கண்கூடு.

*மனம் எதை தீவிரமாக சிந்திக்கிறதோ அதுவாகவே மாறிவிடும் தன்மை கொண்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலும் மயிலும் சேவலும்**

"வெல்வது வேல்". "வேல்" என்பது ஆயுதமல்ல. எல்லாவற்றையும் வெல்வது எனப் பொருள்படும். அறிவுதான் எல்லாவற்றையும் வெல்லும். ஆயுதம் வெல்லாது. ஞானம் தான் வெல்லும். ஆகவே கூர்மை அடிப்பகுதி சூழ்ந்தும், இடைப்பகுதி அகன்றும், நுனிப்பகுதி கூர்மையாக இருப்பது வேல்.

சூரபத்மனின் ஒரு பாதி "நான்" என்ற அகங்காரம் மற்றொரு பாதி "எனது" என்ற மமகாரம். அவைதான் மயிலும் சேவலுமாக உருவெடுத்து முருகனை எதிர்க்க வந்தது. முருகன் திருவருட் பார்வையால் சூரபத்மன் பகைமை நீங்கி ஞானம் பெற்றான். மயில் முருகனுக்கு வாகனமாகியது. சேவல் கொடியானது.

**"உதித்தனன் உலகமுய்ய..."**

இத்தகு பெருமையுடையவன் முருகன். சிவனாயும் சக்தியாயும் பிரிந்தது ஒரே பரம்பொருள். பிரிந்த இருவரும் அன்பில் ஒன்றுபட்டு எழுந்த ஜோதி முருகப்பெருமான். அக்கினியும் தாங்கமுடியாதது. அந்த ஜோதி சிவபெருமான் அக்கினியையே வீரியமாக உடையவர். ஆனால் அந்த அக்கினி வெறும் அக்கினியல்ல. அக்கினி பகவான் தாங்கிய அக்கினியே முருகப்பெருமான். ஆறு பொறிகள் ஒன்றிய ஒரு ஜோதியுருவம், ஆறுமுக உருவம், கார்த்திகைகளாம் ஆறு தாயார்கள் வளர்த்தது. தூய கங்கையாம் ஆறு தாங்கிய ஜோதி. சரவணப்பொய்கையில் தோன்றிய "சரவணபவ" எனும் ஆறு எழுத்தைக் கொண்ட மந்திரமூர்த்தி. ஆறுதலைக் கொடுக்கும்.

ஆறுமுகம், ஆறுபடைவீடன், ஆற்றுப்படையுடையான், சமநிலையாம், துலா ராசியில் தராசுமுனை. வளர்பிறை ஆறாவது திதியாகிய சஷ்டியன்று அவனது வெற்றிநாள். அரக்கராம் புறப் பகைவரையும் அறுவராம் அகப்பகைவரையும் வெற்றி கொண்ட ஆறுமுகனை "நான் வேறு எனாதிருக்க நீ வேறு எனாதிருக்க ஏக போகமாய் சுகவாழ்வு வாழ ஆறாம் திதியில் வழிபடுவோம்.

"வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா"

---

# குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒக் | 04 | புர | 18 | வெள்ளி | சங்கரபண்டிதர் |
| ஒக் | 15 | புர | 29 | செவ்வாய் | கடையிற் சுவாமி |
| நவ | 01 | ஐப் | 15 | வெள்ளி | மெய்கண்டதேவர் |
| நவ | 14 | ஐப் | 28 | வியாழன் | திருமூலர் |
| நவ | 23 | கார் | 08 | சனி | ஆறுமுகநாவலர் |
| நவ | 25 | கார் | 10 | திங்கள் | மெய்ப்பொருளார் |

*கோபத்தால் பிறருக்கு மட்டுமில்லாமல் நமக்கும் தீமையே உண்டாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் 14

(தொடர்ச்சி...

## கடவுளின் புகழும் பெருமையும்

–திரு பூ. சோதிநாதன் அவர்கள்–

### 01) சமய உணர்வு

கீதையின் ஒன்பது, பத்து, பதினொராம் அத்தியாயங்களில் ஒரு சக்திமிக்க சமய உணர்வு விரவியிருப்பதைக் காணலாம். கீதையின் மத்தியிலுள்ள இந்த அத்தியாயங்களில் சில குறித்த கட்டங்களினால் அந்தச் சமயப்பிரக்ஞை தனது உயர்ந்த நிலையை அடைகிறது. அது ஆரம்பக் கட்டங்களில் இருந்ததைவிடக் கடவுளின் சந்நிதானம் மிக நெருங்கிய விடயமாக வந்துவிடுகிறது. உடம்பை விடுத்தபின் கடவுள் ஒரு படைப்பவர், ஓர் உயர்ந்த தந்தை, அடையக்கூடியவர் என்றில்லாமல் மிக நெருக்கமானவர் ஆகின்றார். எட்டாவது அத்தியாயத்திலும், அதற்கு முந்திய அத்தியாயங்களிலும் உலக வாழ்வின்போதே கடவுளோடு தொடர்புகொள்ளக்கூடும் என்ற ஒரு நம்பிக்கை தரப்படவில்லை. அவரை நெருங்க ஓரளவு சாத்தியம் இருக்குமெனப் பார்த்தபோதும்கூட அந்தச் சந்தர்ப்பங்கள் அங்கே மிகத் தொலைவிலேயே உள்ளன. அந்தச் சாத்தியப்பாடும் மரணத்திற்குப் பின்பு அன்றி இந்த உலகின் தற்போதைய வாழ்வில் உள்ளதாக அமையவில்லை. ஆனால், கடவுள் எதிர்காலத்தில் மட்டும்தான் உண்மை அன்று.

### 02) நிகழ்காலச் சாத்தியம்

கடவுள் எப்பொழுதும் இருந்துகொண்டுதான் உள்ளார். ஆன்மா தனக்கும் கடவுளுக்கும் இடையே ஒரு பயங்கரத் தூரத்தைப் பேணி வருவதுதான் கடவுளை எதிர்காலச் சாத்தியமுள்ள ஒரு விடயமாக மாற்றி உள்ளது. அந்தத் தூரமே கடவுளின் தற்போதைய இருப்பைச் சிந்திக்க முடியாது செய்துள்ளது. கடவுளைத் தற்போது அன்றி நாளைக்கோ, அடுத்த நாளோ, சில ஆண்டுகளின் பின்போ, பல பிறப்புக்களின் பின்போதான் தொடர்புகொள்ள முடியுமென்று ஒவ்வொருவரும் மனதில் ஒரு கருத்தை வைத்துக்கொண்டு இருக்கிறோம். அந்தப் பிரச்சினை முற்றும் உளவியலோடு கூடியது மட்டுமன்றி எமது குறித்த காலத்தோடு கூடிய கருத்தையும் அடிப்படையாகக் கொண்டது. அந்தக் கருத்து, ஆன்மா தனக்கெனச் சுதந்திரமான ஒரு தனி அடுக்கமைப்பை உடையதென எண்ணுவதால் வந்தது. எமது இந்தத் தற்போதய வாழ்விலும்கூடக் காலமற்ற கடவுளின் இருப்பு இப்போதே உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள மனதுக்கு இலகுவில் சாத்தியமாக வரவில்லை.

*நற்செயலில் ஈடுபடுபவர்களை கடவுள் ஒருபோதும் கைவிடமாட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அதேவேளை கடவுளே எல்லாம் என்றும் நாம் சொல்லிக்கொள்கிறோம். கடவுள் இங்கே இப்பொழுதே உள்ளவர் ஆவார்.

### 03) காலத் தொடர்ச்சி

எது காலமற்றதோ அதனை எம்மால் கற்பனை செய்ய முடிவதில்லை. நாம் கடவுளைப் பற்றியோ வீடுபேறு அடைவதைப்பற்றியோ எண்ணும்போது ஒரு தொடர்ச்சியான காலமுடிவில் முடிவடையும் விடயமாகவே கருதுகின்றோம். இதனால் காலம் பற்றிய கருத்து எம்மைவிட்டு நீங்குவதில்லை. நாம் இடம் காலம் என்ற அடிப்படையில் இருக்கிறோம் என்ற கருத்து எமது பிரக்ஞையிலும் இருப்பிலும் ஒரு பகுதியாக வந்துவிட்டது. எனவே நாம் காலத்தில் இருப்போமாயின் எம்மால் கடவுளின் இருப்பை காலத் தொடர்ச்சியில் இருந்து பிரிக்க முடியாது. இதனால் கடவுள் ஓர் எதிர்காலச் சாத்தியப்பாடாகவும், உடனடியாக அடைய முடியாததாகவும் மாறுகிறது. உண்மை இங்கே அவ்வாறு வற்புறுத்தப் பெறவில்லை. எல்லா ஆன்மாக்களினதும், எல்லாப் பொருள்களினதும், எல்லாத் தனிமனிதர்களினதும், எல்லாவற்றினதும் இருப்புக்குள் பரந்து இருப்பவர் கடவுள். புவியிலோ வானிலோ கடவுளின் இருப்பில் வேரூன்றாத எதுவும் இல்லை. எனவே, கடவுள் இல்லையெனின் வேறு எதுவும் இருக்கமுடியாது. நாம் நிகழ்காலத்தில் வாழாததால் கடவுளையும் எதிர்கால இருப்பாகவே பேணி வருகின்றோம். ஆனால் அந்த வாதத்தில் ஒரு தவறு இருக்கிறது.

### 04) சொந்த இருப்பை இழத்தல்

கடவுள் எதிர்கால இருப்பாயின் நாமும் நிகழ்காலத்தில் இல்லாமல் எதிர்காலத்திலேயே வாழ்வோம். ஆனால் நாம் இங்கு இப்பொழுது இருக்கிறோம் என்பது ஓர் உறுதியான விடயம். எனினும் கடவுள் இப்பொழுது இருக்கிறார் என்பதை உணராமல் எதிர்காலத்தில் அடையக்கூடிய ஒருவராகத் தொழுது வருகிறோம். இது எமது காலப் பிரக்ஞையில் உள்ள குறைபாடே. அது தானாகவே எமது இருப்பில் படிப்படியாக வேரூன்றி விட்டது. அதன் விளைவாக எம்மால் இடம் காலம் என்ற அடிப்படையை விடுத்துச் சிந்திக்க முடியாமல் உள்ளது.

### 05) காலம் - இடம் - காரண காரியம்

கீதை கடவுளின் இருப்பைக் காலமின்மையின் விரிவோடு மட்டுமன்றி என்றுமுள்ள தன்மையையும் போதிக்க முயலுகின்றது. இருந்தது - இருக்கிறது - இருக்கப்போவது என்ற எல்லாமே கடவுளின் எல்லையற்ற தன்மையில் அடங்கி உள்ளது. கடவுள் எல்லாக் காரணங்களுக்கும் மூல காரணமாக உள்ளார். அத்துடன் அவர் காரியத்துக்கு வெளியிலன்றி எல்லாக் காரியங்களில் இருந்தும் பிரிக்கமுடியாத ஒரு காரணமாகவும் இருக்கிறார். மறு வார்த்தைகளில் கூறின் அவர் காரணமாகவும், எல்லாக் காரியங்களாகவும் இருக்கிறார் எனலாம். அவர் படைப்பவராகவும், படைக்கப்பட்டனவாகவும் இருக்கின்றார். இந்த உண்மையை அறிந்துகொண்டு அருள்பெற்ற ஆன்மாக்கள் அவரைப் புகழ்ந்து துதிக்கின்றன.

*பிரார்த்தனைகளை விடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை அவரைப் பூரணத்துவராகக் கொண்டு அவரது திருநாமங்களைப் பாடுகின்றன. அவரை இந்த உலகிலுள்ள ஒவ்வொரு பொருளாகவும், பலவாகப் பிரிந்துள்ள பிரபஞ்சமாக வும் கொண்டு அவை பாடித் துதிக்கின்றன. அவர் பல முகங்களை உடையவர். அவர் மரணமின்மையாகவும், மரணமாகவும், உள்ளவராயும், இல்லாதவராயும் இருக்கின்றார். அதாவது சத்தாகவும், அசத்தாகவும், அமிர்தமாகவும், மிருத்தாகவும் உள்ளார்.

## 06) மீண்டும் பிறப்பு

பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு துளியும், சடப்பொருளிலுள்ள ஒவ்வொரு அணுவும் கடவுளின் ஒரு முகத்தைப் பிரதிபலிக்கும் ஒரு கருவியாகக் கருதப்பெற முடியும். கடவுளைச் சிந்திப்பது விவரிக்கமுடியாத ஒரு பூரணத்துவத்தில் ஒருவரின் ஆன்மா மூழ்குவதாக அமையும். அவ்வாறு மூழ்குவதன் மூலம் ஒருவர் தனது சொந்த இருப்பை இழக்கிறார். அத்துடன் அவர் சூரியனின் முன் பனிபோலத் தனது தனித்துவத்தையும் மறையச் செய் கிறார். ஆனால் சுயநல நோக்கத்திற்காகக் கடவுளை வணங்குவதற்கு மனதில் ஆசை இருந்தாலும், விண்ணகம் சென்று சுகபோக வாழ்வை அநுபவிப்பதற்கு மனதில் ஆசை இருந்தாலும், ஒருவர் மீண்டும் பிறக்கவேண்டியவர் ஆவார். நற்செயல்களும் கூடத் தமக்கென ஒரு முடிவைக் கொண்டுள்ளன. கர்மத்தின் ஆற்றல் தீர்ந்து போனதும் செயலுக்கான கர்த்தா மீண்டும் தான் எழுந்த பழைய நிலைக்கு வந்து சேருகின்றார். விண்ணகத்தை அடைந்தாலும் கூட அவர் புவிக்கு மீண்டும் திரும்பவேண்டியவராவார். எனவே, விண்ணகம் செல்லும் ஆசை நம்பமுடியாத ஒரு திருப்திக்கே இட்டுச் செல்லும்.

## 07) வேண்டுவதை ஈவான்

எல்லாவற்றையும் அடக்கிய எல்லாம் வல்ல கடவுளிடத்தில் ஒரு பிரிவில்லாத முறையில் தமது மனங்களைத் திருப்பக்கூடியவர்கள் எதனையும் இல்லாதவர்களாக ஆகமாட்டார்கள். அவர்களுக்கு இன்பங்களை அநுபவித்து மகிழ விண்ணகம் செல்லவேண்டிய அத்தியாவசியம் இருக்காது. அவர்களுக்கு எப்போதெப்போதெல்லாம் என்னென்ன தேவைப் படுகிறதோ அவற்றைக் கடவுள் அவ்வப்போது வழங்குகின்றார். கடவுளின் இந்தச் செயல் முறையானது தானாகவே தேவைகளை நிறைவேற்றும் ஓர் உயர்ந்த செயலாகும். ஒருவர் அம்முறை குறிப்பிட்ட ஒரு வழியில் இயங்கவேண்டும் என்று கேட்பதற்கான தேவை அங்கு இருக்காது. அந்த முறை தனது சொந்த வழியிலேயே செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. எமக்குத் தேவையான ஒவ்வொன்றையும் கடவுள் எமக்கு வழங்குவார் என்ற கருத்தைக் கீதையின் ஒன்பதாம் அத்தியாயத்திலுள்ள சுலோகங்களில் ஒன்று உத்தரவாதம் அளிக்கிறது. அதுமட்டுமன்றி எங்களிடம் உள்ள ஒவ்வொன்றையும் அவர் காப்பாற்றுவதோடு எம்மையும் பாதுகாத்து எமக்கு வேண்டியவற்றையும் வழங்குவார். கடவுளின் கருணை, அக்கறை, அன்பு, பரிவு, நன்மை, இரக்கம் என்பவற்றுக்கு ஆயிரம் தாய் தந்தையர்கள் கூடி அவற்றைத் தந்தாலும் சமானம் ஆகாது. மனிதனுக்காகக் கடவுள் கொள்ளும் அன்பு கடவுளுக்காக மனிதன் கற்பனை செய்யக்கூடிய அன்பைக் காட்டிலும் பல்லாயிரம் மடங்கு பெரியது.

(தொடரும்...

*அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீலகண்ட நாயனார்

**– திரு. வி. செல்வரத்தினம் அவர்கள்**

சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குச் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது இளமையாக்கினன் திருக்கோவில். இங்கேயுள்ள சிவபெருமானின் திருநாமம் ஸ்ரீ யௌவனேஸ்வரர். இத் தலத்துக்கு அருகில் திருநீலகண்ட நாயனார் வாழ்ந்து வந்தார். இவர் குயவர் குலத்தைச் சேர்ந்தவர். மிகுந்த சிவபக்தர். இவர் தனது குலத்துக்கு ஏற்ப மட்கலங்கள் செய்து விற்றுச் சீவியம் நடத்தி வந்தார். அத்துடன், தன் கையால் திருவோடு செய்து சிவனடியார்களுக்கும் இலவசமாகக் கொடுத்து மகிழ்ந்து வந்தார்.

இப்படியிருக்க ஒருநாள் இவர் விலைமாது வீட்டுக்குச் சென்று வந்ததைக் கற்புக்குரிய இவருடைய மனைவி கண்டாள். கணவரிடம், "இனி எம்மைத் தீண்டாதீர்கள்" என்று சொல்லிக் கதறி அழுதாள். இல்வாழ்க்கைக்குரிய மற்றப் பணிகளையெல்லாம் சிறப்பாகச் செய்தும் புணர்ச்சிக்கு மாத்திரம் இடமளியாமல் தான் இருப்பதாகவும் அவள் கூறினாள். இதனால் வேதனையுற்ற திருநீலகண்டர், "இனி எந்தப் பெண்ணையும் மனதாலும் தொட மாட்டேன்" என்று சபதமிட்டார். இப்படியே காலங்கள் ஓடிய பின்னர் கணவன், மனைவி இருவரும் வயோதிபப் பருவத்தை அடைந்தனர்.

இந்நிலையில், சிவனடியார் ஒருவர் தனது திருவோட்டை திருநீலகண்டரிடம் கொடுத்து விட்டு, "இது அபூர்வமான, அதிசயம் நிறைந்த திருவோடு. பிறகு வந்து இதனைப் பெற்றுக் கொள்கிறேன். அதுவரை இதைப் பத்திரமாக வைத்திரு" என்று சொல்லிக் கையளிக்க, "அப்படியே செய்கிறேன் சுவாமி" என்று கூறி அதனை வாங்கிய திருநீலகண்டர் வீட்டின் உள்ளே கொண்டுபோய் ஒரு இடத்தில் பத்திரமாக வைத்தார்.

சில நாட்களின் பின்னர் அத்திருவோடு எப்படியோ மாயமாக மறைந்து காணாமல் போய்விட்டது. பல நாட்கள் கழித்து அச் சிவனடியார் திருநீலகண்டரின் வீட்டுக்கு வந்து. தான் கொடுத்து வைத்திருந்த திருவோட்டைத் தருமாறு கேட்டார். திருநீலகண்டர் வீட்டுக்குள் சென்று அவர் வைத்த இடத்தில் அத் திருவோட்டைத் தேடினார். அதனை அங்கே காண வில்லை. அவர் திகைத்துப் போனார். என்ன செய்வது என்று தெரியாமல் அவர் துடித்தார். சிவனடியாராக அங்கே வந்திருப்பது சிவபெருமான்தான் என்று அவருக்குத் தெரியாது.

திருநீலகண்டர் மிகுந்த மனவருத்தத்துடன் வெளியே வந்து அத்திருவோட்டைக் காணவில்லை என்று சிவனடியாரிடம் சொல்ல, சிவனடியாருக்குக் கடும் கோபம் ஏற்பட்டது. "இல்லை நீதான் அத்திருவோட்டைத் திருடியிருக்கிறாய்" என்று திருநீலகண்டரின்மீது குற்றஞ்சுமத்தினார் சிவனடியார். அங்கே பெரிய அமளிதுமளி ஏற்பட்டது. பெரிய குழப்பநிலை ஏற்பட்டது. பின்னர், "திருவோடு உண்மையிலேயே காணாமல் போய்விட்டது என்றால், உன் பிள்ளைமீது சத்தியம் செய்து சொல்" என்றார் சிவனடியார். அதற்குத் திருநீலகண்டர்,

*நம்முடன் வாழ்வோரை புரிந்துகொள்வதற்கு நம்மை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குப் பிள்ளை இல்லை சுவாமி" என்று துக்கத்துடன் கூறினார். "அப்படியானால் உன் மனைவியின் கையைப் பிடித்துச் சத்தியம் செய்து சொல்" என்றார் சிவனடியார். அதற்கு, "நான் என் மனைவியையோ வேறு எந்தப் பெண்ணையோ தொடுவதில்லை என்று சத்தியம் செய்திருக்கிறேன் சுவாமி" என்று திருநீலகண்டர் கூறினார். இதனையடுத்து சிவனடியாருக்கும் திருநீலகண்டருக்கும் இடையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன. பின்னர் ஒருவாறு திருநீலகண்டர் சத்தியம் செய்து தருவதாக ஒப்புக்கொண்டார். அங்கே நின்றவர்கள் எல்லோரும் குளக்கரைக்குச் சென்றனர். சிவனடியாரும் அங்கே சென்றார். திருநீலகண்டர் தடியொன்றை எடுத்து அதன் ஒரு முனையைப் பிடிக்க, மறுமுனையை அவரது மனைவி பிடித்தவாறு இருவரும் நீரில் மூழ்கும் நேரத்தில் சிவனடியார் தடுத்தார். "மனைவியின் கையைப் பற்றிக்கொண்டு மூழ்கச் சொன்னால், இப்படிச் செய்கிறாயே?" என்று கேட்டார்.

அப்போதுதான் நடந்ததைச் சிவனடியாரிடம் சொல்லி, மனைவியைத் தீண்டமாட்டேன் என்ற தன் சபதத்தை விளக்கினார் திருநீலகண்டர். நடந்ததை அங்கிருந்த அனைவரும் உணர்ந்தனர். பின்னர் சிவனடியாரின் ஒப்புதலின்பேரில் அத்தடியைப் பற்றிய நிலையிலேயே இருவரும் குளத்தில் மூழ்கி எழுந்தனர்.

என்ன ஆச்சரியம்! அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சியும் ஆச்சரியமுமாகப் பார்த்துக் கொண்டிருக்க, திருநீலகண்டரும் அவரது மனைவியும் இளமை உருவாகக் குளத்திலிருந்து வெளிப்பட்டனர். அதன் பின்னரே சிவனடியாராக வந்திருப்பது சிவபெருமான் என உணர்ந்த கணவனும் மனைவியும் சிவனடியாரை நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினர். அப்போது அங்கே இடபாரூடராக அம்பிகையுடன் காட்சி தந்தருளினார் சிவபெருமான்.

இதுதான் சிவபெருமான் ஸ்ரீ யௌவனேஸ்வரராகக் குடிகொண்டிருக்கும் திருத்தலம். இக் கோவிலுக்கு முன் அழகிய திருக்குளம் அமைந்துள்ளது. அதாவது திருநீலகண்டரும் அவரது மனைவியும் மூழ்கி இளமையாக வெளிவந்த குளம் ஆகும். ஒரு தை மாதம் சுவாதி நட்சத்திரத்தில் இந்த அற்புதமான சம்பவம் நடைபெற்றது. இதனால், வருடந்தோறும் தைமாத சுவாதி நட்சத்திர நாளில் சிவபெருமான் சிவனடியார்போல் அலங்கரிக்கப்பட்டு, திருநீலகண்டரிடம் திருவோடு தருவதுபோல தரிசனம் தருவார். மறுநாள் விசாக நட்சத்திர நாளில் திருநீலகண்டருக்கு இடபாரூடராகக் காட்சி தந்து முத்தி தரும் திருக்கோலத்தில் அழகே உருவாகக் காட்சி கொடுப்பார் சிவபெருமான். இவர்களை இளமையாக்கிய திரு விழா மிக விமரிசையாக நடைபெறுகிறது. அன்றைய தினம் ஆலயத்தில் சிறப்புப்பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

இத் திருவிழா நாட்களில் தம்பதிகள் இவ்வாலயத்திற்கு வந்து சுவாமி தரிசனம் செய்து வழிபட்டால், தம்பதிகளுக்கு இடையே இருந்துவந்த பிணக்குகள் மற்றும் மனக்கசப்புகள் யாவும் நீங்கி ஒற்றுமையாக, இனிமையாக வாழ்வார்கள் என்பது தெய்வ நம்பிக்கை.

*புத்திசாலி ஒரே ஒருமுறைதான் ஏமாற்றப்படுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை மொழியைப் பொன் எனப் போற்று

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

தாய்க்கு நிகரான தெய்வமும் இல்லை. தர்மத்துக்கு மேலான கொடையும் இல்லை என்பது பழமொழி. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை, தந்தை சொன்மிக்க மந்திரம் இல்லை - அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது மூதாட்டியின் முதுமொழி. தந்தை யார் என்று சொல்பவள் தாய்தான். தாய் மொழி, தாயகம், தாய்நாடு, பூமித்தாய், கங்கைத்தாய், தாய்மை என்ற பிரயோகங்கள் தாயின் பெருமையைப் பேசுகின்றன. தொப்பூழ்க்கொடியுறவு அன்னைக்குத்தான் உண்டு. ஐயிரண்டு திங்கள் மாதா வயிற்றிலே வளர்ந்தவர்கள் நாம். நொந்து சுமந்து பெற்று நோகாமல் ஏந்திமுலை தந்தவள் அன்னை. தாயோடு அறுசுவை போம், ஈன்றுபுறந்தருதல் என்தலைக் கடனே என ஒரு அன்னை பேசு கிறாள். பெற்ற தன் பிள்ளைக் குணங்களை அறிந்தவள் அவள். அவளின் பிரசவ வேதனை யையும் நஞ்சுக்கொடி மயக்கத்தையும் எவருமறியார். பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தன. வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா என்பது பாரதி வாக்கு. வாத்சல்ய உறவுடையவள் அன்னை. தாய் இன்றி பிள்ளையில்லை. பிள்ளைக்காய்ப் பத்தியம் காப்பவள், காயம் உண்பவளும் அவள்தான். பொறுமை, தயை இரண்டிற்கும் அடையாளம் அவள். கொண்டானையல்லால் அறியாக்குலமகளும் அவளே. மனை வரவுக் கேற்ற செலவுபண்ணி வாழ்வை மேற்கொள்பவள் தாய்தானே. தாய் இன்றிச் சேய் இல்லை. தாய் சேய் உறவு பிறப்பினால் வந்தது. ஒரு மகன் சந்நியாசி ஆனால் அவனைத் தந்தை விழுந்து வணங்குவது முறை. தாய் வந்தாற் துறவியான மகன் விழுந்து வணங்குவான். தாய் சொல்லைத் தட்டிக் கெட்டவர் பலர். தாயின் இறுதிக் காலத்தில் சொல் தவறாமல் வந்து ஆதிசங்கரரும், பட்டினத்தாரும் தம் கடமையைச் செய்தார்கள். அன்னையர் தோன்றி மழலைகள் பேசி அறிந்ததும் இந்நாடே, எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே என்பது பாரதி வாக்கு. எனவே தாயை நாம் போற்றிப் பாதுகாப்பது நம் கடமையாகும். அவள் மனம் புண்படாமல் நாம் நடக்கவேண்டும். அவள் நோயால் நலியும்போதும், வயோதி பத்தால் வாடும்போதும், சீறிச் சினக்காமல் உள்ளன்போடு எம் கடமைகளைச் செய்யவும் வேண்டும். தாயன்புதான் தலையாய அன்பு. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்ற நிலை வராமற் பார்ப்பது பிள்ளைகளின் கடமை. ஆலமரம் பயன் கருதாமல் நிழல் கொடுக்கும். அதுபோல தாய் பிள்ளைகளுக்கு நிழலாய் இருந்தாள். மரம் முதிர்ந்தாலும், கறையான் அரித்து பலம் குன்றினாலும் விழுதுகள் மரத்தைத் தாங்கிப் பேணுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரிலே தங்கி இருந்த பிள்ளைகள் ஆலமரத்தைத் தாங்கும் விழுதுபோற் தாங்கிப் பேணவேண்டும்.

சிதலை தினப்பட்ட ஆலமரத்தை
மதலையாம் மற்றதன் விழுதூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகண் தோன்றில்தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

-நாலடியார் தாளாண்மை 197.

**இதன் கருத்து**

கறையானால் அரிக்கப்பெற்று அடிப்பகுதி சிதைந்த ஆலமரத்தை அதன் விழுதே தூண்போல நின்று தாங்கிக்கொள்வதுபோலத் தந்தை தாயிடத்து தளர்ச்சி வந்தபோது அவர்கள் பெற்ற மகன்மார் அக் குடும்பச் சுமையைத் தாங்கிக் காத்தல் மிக முக்கியமாகும். பாடலிற் தந்தை பற்றிவரினும் தாயின்றித் தந்தையேது. எனவே தந்தை தாய் பேண் என்றார் ஔவையார்.

அன்னையர் தினம், தந்தையர் தினம் கொண்டாடி என்ன பயன். வாழும் போதே அவர்களைப் பாதுகாத்தல் முக்கியம். தாய்க்கு நன்றி சொல்லிக் கட்டுமா. நன்றிக்கடன் கழிப்பது பெற்ற பிள்ளைகளின் கடமை. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் சான்றோன் எனக் கேட்ட தாய் அல்லவா. உலகத்துக்கு வானம் மழையை வழங்கி வாழ வைக்கிறதே. அது சுயநலம் கருதியா பெய்கின்றது. அந்த மழைக்கு யாரேனும் நன்றி சொன்னது உண்டா. அஃதேபோலப் பெற்ற தாயும், எந்தப் பிரதி உபகாரத்தையும் எதிர்பாராமல் சேவையாற்றுகிறாளே அவளை நாம் போற்றி மதிப்பது நம் தலையாய கடமையல்லவா.

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு.

-தமிழ் வேதம் 211.

இந்த நவீன உலகத்திற் தாய்சேய் உறவின் இடைவெளி அகலக் காண்கிறோம். மனைவியின் வழி செல்லும் மைந்தர்களால் இவ்வுறவு இடையீடுபடவும் காண்கின்றோம். அன்பிற்குக் கதவே இல்லை. அன்பின் வழியது உயிர்நிலை. அன்பகத்தில்லா வாழ்வு வரண்ட பாலைவனமாகும். பிள்ளை சீறினாலும் பெற்றவள் சீறவே மாட்டாள். தாயின்மடியே எம்மைத் தாலாட்டும் ஏணை, தொட்டில்.

தாயின் பெருமையைப் பாரதியார் தன் சுயசரிதத்திலே இப்படிப் பாடியுள்ளார்.

பெண்டாட்டி தனையடிமைப்படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ
"கண்டார்க்கு நகைப்"பென்னும் உலக வாழ்க்கை
காதலெனும் கதையினுடைக் குழப்பமன்றோ?
உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவளென் றறியீரோ? உணர்ச்சி கெட்டீர்
பண்பாய்ச்சி ஔவை "அன்னையும் பிதாவும்
பாரிடை முன்னெறி தெய்வம்" என்றாள் அன்றோ?

*ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வமுண்டோ?
தாய் பெண்ணே யல்லளோ? தமக்கை, தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?
மனைவி யொருத் தியையடிமைப் படுத்தலாமோ?
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
"தாயைப்போ லேபிள்ளை" என்று முன்னோர்
வாக்குளதன் றோ?பெண்மை அடிமை யுற்றால்
மக்களெலாம் அடிமையுறல் வியப் பொன்றாமோ?

வீட்டிலுள்ள பழக்கமே நாட்டி லுண்டாம்
வீட்டினிலே தனக்கடிமை பிறராம் என்பான்
நாட்டினிலே ... ... ... ... ... ...
நாடோறும் முயன்றிடுவான் நலிந்து சாவான்
காட்டிலுள்ள பறவைகள் போல் வாழ்வோம், அப்பா!
காதலிங்கே உண்டாயிற் கவலையில்லை
பாட்டினிலே காதலைநான் பாடவேண்டிப்
பரமசிவன் பாதமலர் பணிகின் றேனே.

-பாரதியார் பாடல் சுயசரிதை 46, 47, 48.

நன்றிகெட்ட மகனைவிட நாய்கள் மேலடா எனச் சினிமாவிற் பாடினாலும் அது பொருள் நிறைந்ததே. பத்துப் பிள்ளைகளைப் பெற்று பேணி வளர்த்து பெரியவர்களாக்கி, பேரப்பிள்ளைகளையும் கண்டு கழிபேருவகை கொள்ளும் அன்னையை, அந்தப் பத்துப் பிள்ளைகளில் ஒரு பிள்ளைகூடக் கவனியாவிடின் அவர்கள் பிள்ளைகளா?

மதலையைப் பெறுநாட் துன்பம்
வளர்த்திடு நாளுந் துன்பம்
விதலை நோய் அடையிற் துன்பம்
வியன் பருவத்துந் துன்பம்
கதமுறு காலன்வந்து கைப்பற்றின்
கணக்கிலாத் துன்பம்
இதமுறல் என்னாட் சேயால்
என்றைக்கும் துன்பந்தானே.

-குசேலோபாக்கியானம்.

பெற்றவள் கண்ணீர் சிந்தாமல் பேணுவது பெண் பிள்ளைகளினதும், ஆண் பிள்ளை களினதும் தலையாய கடமையாம். அன்னை மொழியைப் பொன்னெனப் போற்று என்பதற்காக ஒரு கதை சொல்வார்கள்.

அந்தத் தாய்க்கு ஒரே ஒரு மகன். அவனை அயல் ஊரில் உள்ள தன் சகோதரன் (தாய் மாமன்) வீட்டுக்கு ஒரு தேவைக்காக அனுப்பினாள் தாய். அப்போ வாகன வசதி இல்லை. நடந்துதான் போகவேண்டும். எனவே தனிவழி போகக்கூடாது என்பதற்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுச்சோறும் கட்டிக்கொடுத்து, ஒரு முட்டியிலே தண்ணீர்விட்டு ஒரு நண்டையும் விட்டு, தூக்கிச் செல்லக் கயிறும் போட்டுக் கொடுத்துவிட்டாள் அன்னை. அவன் நடந்து சென்ற களைப்பால் ஓர் ஆலமர நிழலிலே இருந்து, சோற்றைச் சாப்பிட்டான். அயர்ந்து துண்டை விரித்துக் கிடந்து உறங்கிவிட்டான். காட்டு வழியானபடியால் விசப்பாம்பொன்று ஊர்ந்து வந்து முட்டியிலே தலையைவிட்டு சாப்பாடு தேடியது. அப்போ உள்ளே இருந்த பெரிய நண்டு பாம்பின் தலையைக் கடித்துத் துண்டாடிவிட்டது. நித்திரை முறிந்து அப் பையன் எழுந்து பாம்பைப் பார்த்துப் பயந்து போனான். பின்னர் அது இறந்துகிடக்கக் கண்டு தான் தப்பிப்பிழைத்தேனே என மன நிம்மதியடைந்தான். முட்டியிலே நண்டையும் போட்டுத் தாய் கொடுத்தபோது வேண்டாம் எனச் சொன்ன மகனை வற்புறுத்தி, வழித்துணைக்குக் கொண்டுபோ என்ற தாயின் சொல்லை நினைந்து அவன் பெருமிதம் அடைந்தான். எனவே நாமும் தாய் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்போமாக.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள்
தாயென்றுகும் பிடடி பாப்பா. -மகாகவி பாரதி.

---

## பிரச்சினை இல்லாத வாழ்க்கை எது?

புத்தர் ஒரு கிராமத்தில் தங்கியிருந்தார். அப்போது அவரைப் பார்ப்பதற்கு ஒரு இளைஞன் வந்தான். வெகு தொலைவு நடந்து வந்த அவன், புத்தரைப் பார்த்த அக்கணமே கதறி அழுதான். அவன் அழுது முடிக்கும்வரை பொறுத்திருந்த புத்தர் கனிவாகக் கேட்டார், “சகோதரா ஏன் இப்படிக் கண்ணீர் சிந்துகிறாய்? உனக்கு ஏற்பட்ட பிரச்சினையை என்னிடம் சொல்”. “பகவானே, என் வாழ்க்கையில் நான் எல்லையற்ற துன்பங்களை அனுபவித்து வருகிறேன். எடுத்த எதிலும் தோல்வி. தாங்கமுடியாத துயரம். ஆதரவுக்கென்று எனக்கு யாருமில்லை. என் மனது மிகவும் பலவீனமாகப் போய்விட்டது. எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்”. புத்தர் அன்புடன் அவன் கையில் தண்ணீர்க் குவளையைக் கொடுத்தார். பிறகு உப்பையும் கொடுத்துவிட்டுச் சொன்னார், “சகோதரா இந்தக் குவளையில் உப்பிட்டுக் கலக்கி அருந்து”. அவன் உப்பைக் குவளையில் இட்டு கலக்கி அருந்திப் பார்த்தான். இரண்டு மிடறு குடிப்பதற்குள் அவன் முகம் கோணியது. மேற்கொண்டு குடிக்க முடியாமல் அப்படியே கீழே வைத்துவிட்டுச் சொன்னான், “என்னால் இந்தத் தண்ணீரைக் குடிக்க முடியவில்லை பகவானே. மிகவும் கரிக்கிறது”. புத்தர் மீண்டும் “இதோ இப்போதும் அதே அளவு உப்பைத் தருகிறேன். இதை நீ எதிரில் இருக்கும் அந்தக் குளத்தில் கரைத்துவிடு!”. புத்தர் சொன்னபடியே அவன் அந்த உப்பை எதிரிலிருந்த குளத்தில் கரைத்தான். “இப்போது அந்தக் குளத்து நீரைக் குடித்துப்பார்”. உப்புக் கரைக்கப்பட்டபோதும் குளத்து நீரில் உப்பின் சுவை கொஞ்சம்கூடத் தெரியவில்லை. அந்த இளைஞன் போதுமான அளவு நீர் குடித்துவிட்டுக் கரைக்கு வந்தான். நீ சிறிய குவளையில் இருந்த நீரிலும், பிறகு இந்தக் குளத்து நீரிலும் கரைத்தது ஒரே அளவான உப்புதான். ஆனால் சிறிய குவளையில் தண்ணீர் கொஞ்சம்தான் இருந்தது. அதனால் கரிப்புச் சுவை அதிகமாக இருந்தது. எனவே உன்னால் தண்ணீரைக் குடிக்கமுடியவில்லை. ஆனால் இதே உப்பு குளத்து நீரில் கரைக்கப் பட்டிருந்தாலும் அந்த நீரில் உப்பின் சுவை கொஞ்சம்கூடத் தெரியவில்லை. நம் துன்ப துயரங்கள் என்பவை உப்பைப்போலத்தான். இவை வாழ்க்கை நெடுகிலும் வந்துகொண்டே இருக்கும். இவற்றைத் தவிர்க்கவே முடியாது. ஆனால் நம்மால் நம் மனதை விசாலமாக்க முடியும். இப்போது உன் மனது அந்தச் சிறிய குவளையைப்போல் தான் இருக்கிறது. அதனால்தான் வாழ்க்கைச் சிரமங்கள் உனக்கு இந்தளவு துயரமளிக்கின்றன.

*செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 88

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 நுனியிலிருந்து படித்தால்தான் புத்தகத்தின் பொருள் புரியும்
அடியிலிருந்து படித்திட்டால் அர்த்தங்கள் மாறிடல்போல்
முதலிருந்து வாழ்வுதனை அறிந்தால்தான் வாழ்வாகும்
அல்லாத எல்லாம் அடிபடிக்கும் செயல்போலாம்.

02 அடிப்பக்கம் நட்டால் தான் மரம்தளிர்க்கும் அல்லாமல்
நுனிப்பக்கம் நடுவதால் மரம்பட்டு அழிதல்போல்
மூத்தோரை மதித்தால்தான் இளையோரும் வளம்பெறுவர்
அல்லாத எல்லாம் நுனிப்பக்கம் நடல்போலாம்.

03 நுனிப்பக்கம் உரித்தால்தான் தேங்காயில் பொச்சகலும்
அடிப்பக்கம் உரித்திடுதல் கடினமான காரியம் போல்
மென்போக்கை கடைப்பிடிப்போர் மேன்மேலும் வளம்பெறுவர்
அல்லாத எல்லாம் அடியுரிக்கும் செயல்போலாம்.

04 அடித்துலாவை மிதித்தால்தான் ஆழநீரை எடுத்திடலாம்
நுனித்துலாவை மிதிப்பதனால் ஆழமதே கண்டிடல்போல்
அடிப்படையை அறிந்தால்தான் பிரச்சினையைத் தீர்த்திடலாம்
அல்லாத எல்லாம் நுனி மிதிக்கும் செயல்போலாம்.

05 நுனிக்காலால் நடந்தால்தான் அடியாழம் தெரியவரும்
அடியாழம் தெரியாமல் காலைவிடல் அபாயம்போல்
படிப்படியாய் முயன்றால்தான் முன்னேற்றம் கைகூடும்
அல்லாத எல்லாம் ஆழமறியாமல் கால்விடும் செயல்போலாம்.

06 உங்களிடம் இருப்பதொன்று பிறரிடம் இல்லையெனில்
அதற்காக அவரை நீங்கள் தாழ்வாக எண்ணாதீர்
அவரிடம் இருப்பதொன்று உங்களிடம் இருக்காது
அறிந்தவரை மதித்தால்தான் உம்மதிப்பு மதிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 தோல்வியாளர் என்றொருவர் நிலையினை வைத்து நீங்கள்
மேல்நிலையில் உள்ளவர்போல் மேதினியில் நடவாதீர்
வெற்றியினைத் தந்தவரும் அவரேதான் என்றறிந்து
பற்றோடு நடந்திடுவீர் வெற்றியென்பது அதுவேயாம்.

08 குற்றவாளி என்றொருவர் கூண்டிலே ஏறிவிட்டால்
மற்றவர்கள் சுற்றவாளி என்று அர்த்தம் கொள்ளாதீர்
மனச் சாட்சிக் கூண்டிலெமை நாமேற்றி விசாரித்தால்
மிகப்பெரிய குற்றவாளி நாமாயும் இருந்திடலாம்.

09 நோயாளி என்றொருவர் உடல்நிலைக்கு நாமமிட்டு
உடனிருக்க விரும்பாமல் ஊரைவிட்டே ஓடாதீர்
அறிந்தநோய் சிறியதாகும் அறியாநோய் பெரிதாகும்
அறியாநோய் உடையவர்கள் நாமாயும் இருந்திடலாம்.

10 ஊனமுற்றோர் என்றொருவர் உறவுதனை வெறுத்துவிட்டு
வானமெங்கள் காலடியில் என்று எண்ணல் தவறாகும்
ஆனமட்டும் உள்ளமதை அகழ்ந்துநாம் பார்த்தால்தான்
ஊனமெங்கள் உள்ளத்துள் இருப்பதுவும் தெரியவரும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
|---|---|
| செந்திவேல் மோகனதாஸ் | செந்திவேல் மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல - 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல - 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

# கண்ணபரமாத்மாவின் கவின்மிகு கருணை

*– திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –*

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் பூமாதேவியின் வேண்டுதலுக்கிரங்கி பூபாரந் தீர்ப்பதற்காகவே கண்ணனாக திருவவதாரம் செய்து மகாபாரதத்தைத் தோற்றுவித்தார். காத்தற் கடவுளாகிய பரந்தாமன் மகாபாரதத்திலே சகோதரர்களுக்கிடையே பகைமையை வளர்த்துப் பஞ்ச பாண்டவர்கள் மூலமாகத் தமது காரியத்தைச் சுலபமாக நிறைவேற்றும் பாங்கு போற்றுதற்குரியது.

இந்த உலகம் மாயை. இம் மாயையை வெற்றிகொள்வதாயின் மன வைராக்கியம் வேண்டும். மகாபாரதப் போர் ஆரம்பமாகிய முதல்நாளிலே பாண்டவர்களும் கௌரவர்களும் தத்தம் சேனைகளை அணிவகுத்து நின்றனர். அப்போது அருச்சுனனுடைய தேர் அழகாக முன்னே வந்து நின்றது.

இந்தப் பார்த்தனுக்குத் தேரோட்டும் சாரதியாக ஸ்ரீ கண்ணபரமாத்மா தேர்த் தட்டிலே உட்கார்ந்திருந்தார். அருச்சுனனோ போர்க்கோலம் பூண்டு யுத்தத்துக்கு ஆயத்தமாக அந்த அழகான தேரிலே நேரிலே வந்திருந்தான்.

சுற்றுமுற்றும் பார்த்த அருச்சுனனுக்கு ஓர் எண்ணம் உதயமாயிற்று. முன்னே நிற்பவர்கள் துரோணர், பீஸ்மர், விதுரர் என்று எல்லோருமே வணக்கத்துக்குரிய உறவினர்கள். அனைவரையும் கண்டதும் அவனுடைய மனம் அலைபாய்ந்தது. இத்தனை உறவினர்களையும் கொன்று வென்று இந்த ராஜ்யத்தை ஆளவேண்டுமா?

இப்படி ஒரு வாழ்க்கை தேவைதானா? சொந்தச் சகோதரர்களையெல்லாம் கொன்று குவித்துவிட்டு அரசாட்சியைக் கைப்பற்றி என்ன பிரயோசனம்? அவர்களெல்லாம் இல்லையென்று ஆனதன் பிற்பாடு யாரை யார் ஆளுவது? சீ...! வெட்கம்...!! உடனே அருச்சுனன் தேர்த்தட்டினின்றும் குதித்து ஓடத் தொடங்கினான்.

இதைக் கண்ணுற்ற கண்ணபரமாத்மா நடந்ததைத் தன் ஞானதிருஷ்டியினால் அறிந்து கொண்டார். தேரினின்றும் கீழே குதித்து ஓடிய அருச்சுனனைப் பிடித்திழுத்து வந்து "அருச்சுனா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? ஒரு நல்ல வீரனுக்கு இது அழகாகுமா? ஏன் இப்படிச் செய்தாய்? என்று கூறி மீண்டும் தேரிலே ஏறச்செய்து அவனது உள்ளக்கிடக்கையை அறிந்து கொண்டு அருச்சுனனுடைய தடுமாற்றத்தை மாற்றும் நோக்குடன் தத்துவம் பேசத் தொடங்கினான்.

"அருச்சுனா! நீ ஒரு வீரன் என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்போதுதான் தெரிகிறது சுத்தக் கோழை என்று! சீ சீ உனக்கு வெட்கமில்லை. யுத்தம் என்று வந்தபிறகு யாராவது திரும்பி ஓடுவானா?" என்று தேனொழுகப் பேசி அருச்சுனனுக்கு ஞான உபதேசம் செய்தான் கண்ணன்.

*எந்த செயல் செய்யும்போதும் திறமை என்ற ஒன்றை மட்டும் வளர்த்துக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏ அருச்சுனா! நான் சொல்வதை மிகவும் அவதானமாகக் கேட்பாயாக. இப் பரந்த நிலவுலகின் கண்ணே எப்போது தர்மங்குன்றி அதர்மம் மேலோங்குகின்றதோ அந்தக் காலத்தில் நான் திருவவதாரம் செய்து அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவேன். அதாவது துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்வேன்" என்று மெதுவாக சொல்லத் துவங்கினான்.

கண்ணன் சொல்லச் சொல்ல அருச்சுனனுடைய உள்ளத்திலே ஒரு வெளிச்சம் உண்டாகியது. ஆனாலும் அவனுடைய அடி மனத்திலே ஒரு குற்ற உணர்வு இருந்துகொண்டு உறுத்திக்கொண்டேயிருந்தது. உடனே கிருஷ்ணபரமாத்மாவைப் பார்த்து, "கண்ணா! என்னுடைய உறவுகளையெல்லாம் சாகடித்துவிட்டு இந்தப் பூலோக சாம்ராஜ்யத்தை ஆளவேண்டுமா?" இதுதான் இப்போதுள்ள பிரச்சினை என்றான்.

கண்ணன் சிரித்துக்கொண்டே பதில் கூறினான். "அட அர்ச்சுனா! நீ பிறக்கும்போது ஏதாவது கொண்டு வந்தாயா? இப்போது அதை இழந்துவிட்டாயா? நன்றாகச் சிந்தித்துப் பார்! உனக்கே சரியான பதில் கிடைக்கும்".

"கண்ணா! நான் பிறக்கும்போது ஒன்றுமே கொண்டுவரவில்லை. ஆனால் இந்தப் பேய் மனம் கேட்குதில்லையே! என்னுடைய உறவு, என்னுடைய காணி, என்னுடைய வீடு என்று ஆசையை வளர்த்துக் கொண்டோமே! அதற்கு நீங்கள் என்ன விடை சொல்லப் போகின்றீர்கள்?" என்றான் அருச்சுனன்.

மீண்டும் சிரித்தான் கண்ணன். "உங்களுக்குச் சிரிப்பாய் வருகிறது. எனக்கு வேதனை யாய் இருக்கிறது" என்று அருச்சுனன் கண்கலங்கியபடியே கூறினான்.

அதற்கும் சிரித்த கண்ணன் அருச்சுனனைப் பார்த்து, "அருச்சுனா! எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. இப்பொழுது எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது. எது இனி நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும். இவ்வாறு மனத்திலே நீ எண்ணிக்கொண்டால் கவலைப்படத் தேவையில்லை. உன்னுடையது என்று நீ எதைக் கொண்டு வந்தாய்? இப்போது அதை இழந்ததுபோல் துடிக்கின்றாய்! எதற்காக நீ இப்போது அழுது கண்ணீர் வடிக்கின்றாய்! உன்னால் சிந்திக்க வேண்டிய விடயம் நிறைய இருக்கிறது.

இந்த உடம்பு நிலையில்லாதது. நீர்க்குமிழிக்கு நிகரானது இந்த யாக்கை. அழிகின்ற தேகத்தை வைத்துக்கொண்டு தேசத்தில் வாழத் துடிக்கின்றாயே! இவ்வுலகத்தில் மனிதப்பிறவி ஒரு புனிதப்பிறவி. இந்த உடம்பில் உயிர் இருக்கும் மட்டும்தான் எல்லா ஆட்டமும். உயிர் பிரிந்துவிட்டால் பொருள் பொருள் என்று ஆலாய்ப் பறந்த மனிதன் இன்று பிணம் பிணம் என்று அழைக்கப்படுகின்றான். ஆதலால் இந்த நிலையில்லாத உடம்பில் உயிர் இருக்கும்போதே நீ புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். பாவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும்.

"அருச்சுனா! நன்றாகச் சிந்தித்துப் பார்! நீ இந்தப் பூமியில் எதை எடுத்துக்கொண்டாயோ அது இன்று உன்னுடையதாகவே இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதே நாளைக்கு இன்னொருவருக்குச் சொந்தமாகிவிடக்கூடும். இதை நீ மறுக்கமுடியுமா? நான் நான் என்ற ஆணவத்தை அடக்கிவிட வேண்டும். அகங்காரம் இருக்கும் மட்டும் உனக்கு உய்வே கிடையாது. இந்த யுத்தத்திலே நீ கொல்லப்போவது உடலைத்தான்; உயிரையல்ல. அது

*விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர அழுவதற்கு அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பைவிட்டுப் பிரிந்து வேறொரு பிறப்பெடுக்கப் போய்விடும். இது உலக நியதி. கடமையைச் செய்.

"அருச்சுனா! நீ செய்கின்ற இந்தப் பாரதப் போரிலே நடப்பது அனைத்துக்கும் நான் பொறுப்பு. நீ உடம்பைக் கொல். அது பாவமாக இருக்கிறதே என நீ நினைத்தால் அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். நீ ஒன்றுக்கும் பயப்படாமல் யுத்தத்தைச் செய். உனக்கு தேர்ச் சாரதியாக நான் இருக்கின்றேன். யுகந்தோறும் என்னுடைய அவதாரம் சிஷ்டர்களைக் காப்பதும் துஷ்டர்களை அழிப்பதுமேயாகும். பூமி பாரம் தீர்க்கவே இந்த யுத்தம். உனக்கு எந்தப் பாவமும் வந்து சேராமல் நான் பார்த்துக்கொள்கிறேன். உற்றார் உறவினர் என்பதை மறந்துவிடு. துணிந்து உன் வீரத்தைக் காட்டு. ஈற்றில் வெற்றி உனக்குத்தான். துரியோதனாதியோர் கெட்டவர்கள். அவர்களுக்கு அழிவு நிச்சயம். சீரிய நேரிய பாதையில் நடக்கும் பாண்டவர்களுக்கே வெற்றி கிடைக்கும். இது உறுதி!" இவ்வாறு யுத்தகளத்திலே வைத்து அருச்சுனனுக்குக் கண்ணன் கீதையை உபதேசித்தான். கண்ணன் கூறியவை அனைத்துமே கீதோபதேசமாகும். இந்த உண்மையை நாங்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கடவுள் இந்த உடம்பைத் தந்தது நல்லன செய்வதற்குத்தான். தீயவை செய்வதற்கல்ல. எவ்வளவுதான் துன்ப துயரங்கள் வந்தாலும் உண்மையே பேச வேண்டும். மறந்தும் பொய் பேசக்கூடாது. மற்றவர் மனம் புண்படும்படியாகப் பேசக்கூடாது. நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் நன்மையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். எள்ளளவும் தீமை பயக்க இடமளிக்கக்கூடாது.

பொருள் சேர்க்கும்போதும் பணம் உழைக்கும் போதும் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். தீய வழியில் மற்றவர்களை ஏமாற்றிப் பணம் சேகரிக்கக் கூடாது. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். நாம் நல்ல வழியில் பாடுபட்டு உழைத்தால்தான் அந்தப் பணம் நின்று நிலைக்கும். கெட்ட வழியில் சேர்த்த பணமானது எப்படி வந்ததோ அப்படியே போய்விடும். கடவுள் ஒருவர் இருக்கிறார். நாம் செய்வதையெல்லாம் பார்த்துக் கொண்டே இருப்பார். இருட்டுக்கும் பார்க்கின்ற விழி இருக்கும். சுவருக்கும் கேட்கின்ற காது இருக்கும். ஒருவரும் பார்க்கவில்லைதானே என்பது மடைத்தனம். நாம் யாரையும் ஏமாற்றலாம். கடவுளை ஏமாற்ற முடியாது.

புண்ணியமாம் பாவம்போம்; இது மண்ணில் பிறந்தார்க்குரிய நியதி. நாம் நாம் செய்வது நமக்குத்தான். ஆகவே நாங்கள் என்றுமே எப்பொழுதுமே நல்லதையே செய்ய வேண்டும். தீயவற்றை விலக்கிவிட வேண்டும். வினை விதைத்தவன் வினையறுப்பான்; தினை விதைத்தவன் தினையறுப்பான். பாகற்கொட்டையை நட்டால் பூசணிக்காய் கிடைக்காது. பாகற்காய்தான் கிடைக்கும்.

நாம் நல்லதைச் செய்தால் நன்மைகள் உண்டாகும். தீயவற்றைச் செய்தால் தீமையே கிட்டும். இதை மனதில் வைத்துக்கொண்டு கீதை காட்டிய பாதையில் வாழ்க்கை வண்டியை ஓடவிடவேண்டும். எல்லாம் வல்ல ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீமந் நாராயணனைத் தினமும் சிந்தித்து வந்தித்துச் சேவிக்க வேண்டும். இதுநாள்வரை போனது போகட்டும். இனிமேலாவது நன்மையைச் செய்து இம்மைக்கும் மறுமைக்கும் அம்மைக்கும் நன்மை பயக்க வாழ்வதற்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

*உன்னால் முடியும் என்று நம்பு. முயற்சிக்கும் அனைத்திலும் வெற்றியே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோம்புதல் நலம்

**– திரு குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாந் தலை"
-திருக்குறள் 322.

தமக்குக் கிடைத்த உணவைப், பசித்து வந்தவர்களுடன் பகுத்து அவர்களுக்கும் கொடுத்து, அவர்களின் பசியை ஆற்றித் தானும் உண்டு, பல உயிர்களையும் காப்பாற்றுதல்; அறநூலார் தொகுத்த அறங்கள் மற்றும் தான தர்மங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்த அறம் ஆகும் என்பது இக் குறட்பா தரும் கருத்து ஆகும்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"
"ஐயமிட்டுண்"
"தானங்களிற் சிறந்தது அன்னதானம்"

எனத் தலைசிறந்த வாழ்க்கை அறங்களையும் மனித விழுமியங்களையும் வகுத்து, வாழ்ந்து காட்டியவர்கள் நம்முன்னோர்கள். "அறஞ்செய விரும்பு" என்ற ஔவை மூதாட்டியின் மகுட வாசகத்தை மதித்து மனத்தினால் விரும்பிச் செயலினால் செய்துகாட்டியவர்கள் நம் முற்சந்ததியினர். உணவு வழங்கிப், பசிநோய் நீக்கும் பண்பாடு இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகிறது என்றால் மிகையாகாது.

தரும வழியில் தேடிய பொருள்களைப் பகுத்துத் தானும் உண்டு, ஏனைய உயிர் களுக்கும் கொடுத்து அவைகளையும் காப்பாற்றுதல் அறங்கள் அனைத்திலும் தலையாய அறமாகும்.

உடலுக்கு வரும் பிணிகளுள் மிகக் கொடியது பசிப்பிணியேயாகும். அதுவே ஏனைய நோய்களுக்கும் மூலகாரணமாகின்றது.

மனிதர்களுக்கும் தாங்கொணாத் துன்பம், துயரங்களை விளைவிப்பதில் முதலிடம் வகிப்பது பசிப்பிணியேயாகும். அதனாலேயே ஔவைப்பிராட்டியாரும் "கொடிது கொடிது வறுமை கொடிது" என்று கூறுகிறார்.

பசிப்பிணியைப் போக்கவல்லவர்களே உண்மையான மனிதாபிமானம் மிக்க கொடை வள்ளல்கள் என உலகம் காலம் காலமாகப் போற்றி வருகிறது. "உலகம் என்பது உயர்ந் தோர் மேற்று" என்னும் பழந்தமிழர் கொள்கை நினைவு கூரற்பாலது. "உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்பது அவர்கள் வழங்கிய மகுடவாசகம் ஆகும். உயிரை நிலைக்கச் செய்வதற்கு அது வாழும் இல்லமாகிய உடல் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். அதற்கு நேரம் தவறாமல் உணவு, நீர், பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். உணவு, உடை, இருப் பிடம் என்பன மனிதன் வாழ்வதற்கு வேண்டிய அத்தியாவசியத் தேவைகள் ஆகும். இவற்றில் ஒன்று பூர்த்தி செய்யப்படாவிடினும் மனித வாழ்க்கை நிறைவாக அமையாது.

*எதிர்காலம் உள்ளங்கை ரேகையில் இல்லை. அது உன் உள்ளத்தில் உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு சம்பந்தமாகத் திருமூலர் தாம் இயற்றிய "திருமந்திரம்" நூலில், "உயிரை உடம்பினுள் நிலைக்கச் செய்வதற்கு, அது வாழும் இல்லமாகிய உடல் நன்கு ஓம்பப்பட வேண்டும். எனவே உடல் புறக்கணிக்கக் கூடிய ஒன்றன்று" என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளார். உடலை நன்கு பேணி வளர்ப்பதற்கு உணவு இன்றியமையாததாகும். அதனாலேயே தாம் பாடிய திருமந்திரம் நூலில் ஒரு பாடலில், "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" என்கிறார்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்...." என்று மற்றொரு பாடலில் உடம்பை ஓம்பவேண்டியதன் இன்றியமையாமையை எடுத்துக் கூறுகிறார். உடலை நன்கு பேணிப் பாதுகாப்பதற்கு நல்ல சத்தான உணவு முக்கியமானது.

"தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தினர், தாம்" ஆகிய ஐந்து தரப்பினருக்கும் உணவளித்துப் பாதுகாத்தல் இல்வாழ்வானின் இன்றியமையாக் கடமையாகும் என வள்ளுவப் பெருந்தகை எடுத்துரைக்கின்றார்.

குடும்பமாக வீட்டிலிருந்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் பசித்து உணவுகேட்டு வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாது உணவு அளிப்பதற்கேயாகும் என்கிறார் வள்ளுவப் பெருமான்.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

-திருக்குறள் 81.

தம்மைநோக்கி உணவு கேட்டு வருபவர்கள் புறத்தே இருக்க, தான்மட்டும் உண்டு இன்புறுவது சைவ அறநெறிக்கு உடன்பாடில்லை.

இல்லறம் சைவ அறநெறிப்படி நல்லறமாவது எப்போவெனில், பசித்து உணவு கேட்டு வந்தவர்களுக்கு பசி தீர்த்து, அவர்களை மகிழ்விக்கும்போதுதான் என்பது உணரப்பட வேண்டிய மனித விழுமியம். அத்தகைய நன் மக்களைத் துன்பம், துயர்கள், நோய் பிணிகள், செய்வினை சூனியங்கள், தீய சக்திகள் அணுகமாட்டா. அவர்களின் வாழ்வில் எந்நாளும் இன்பம் பொங்கும். அவர்கள் துன்பத்தில் துவண்டு அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் விட்டு மடிவதில்லை.

சைவமரபு பசித்தோருக்கு உணவளிக்கும் உத்தம பண்பினைக் காலம் காலமாகக் கட்டியெழுப்பி வந்துள்ளது. இன்றும் அப்பண்பினைப் பேணி வருகிறது. திருக்கோயில்களுக்கு அணித்தாகத் திருமடங்கள், சத்திரங்கள் என்பனவற்றை அமைத்தல், உற்சவங்களின்போதும் மற்றும் நாயன்மார்களின் குருபூசைத் தினங்களிலும் திருமடங்களிலும் அடியார் இல்லங்களிலும் பாடசாலைகள் மற்றும் கல்விநிலையங்களிலும் அன்னதானம் செய்தல் மற்றும் மகேஸ்வரபூசை செய்தல் மரபாகி வந்துள்ளது. அந்தப் பண்பாடு, பாரம்பரியம் என்பன இன்றும் தொடர்வதைக் காணலாம். இதற்கு உதாரணமாக பின்வரும் தலங்களைக் கூறலாம். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள "சந்நிதியான் ஆச்சிரமம்" என்னும் திருமடாலயத்தைக் கூறலாம். "சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் தலைமையில்

***தன்னில் தானே மகிழ்பவனை தீமையான ஆயுதங்கள் தொடுவதில்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானப் பணிகள் மற்றும் சமூக, கலை, கலாசார, ஆன்மீக பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவது போற்றுதற்குரியன.

நல்லூர், மாவிட்டபுரம், கதிர்காமம், முறிகண்டி, வற்றாப்பளை, திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேச்சரம் மற்றும் வல்லிபுர ஆழ்வார் ஆலயம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரம் ஆகிய திருத்தலங்களைக் கூறலாம். இத் திருத்தலங்களில் அன்னதான மடங்கள் உள்ளன.

சர்வலோக நாயகியை "அன்னபூரணி" என்று அழைத்து வழிபடும் பெருமையும்; பெற்றதாய் அன்னம் அன்போடு அளித்துக் காப்பாற்றி வருவதால் தாயை "அன்னை" என்று அழைக்கும் பாங்கும் சைவத்தமிழ் மரபிற்கே உரியன.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டபோது, மக்களின் பசித்துயரைப் போக்க, குன்றையூரில் சிவன் திருவருளால் பெற்ற நெல்மணிகளை திருவாரூருக் குக் கொண்டு செல்வதற்கு உதவுமாறு தோழமை முறையில் திருக்கோளிலியில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்தார். "கோளிலி எம்பெருமான் குன்றையூர் சிவ நெல்லுப்பெற்றேன்; ஆளிலை எம்பெருமான் அதை அட்டித் தரப் பணியே" என்பது சுந்தரர் பாடிய தேவாரப் பாடலடிகள். பாடலைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் அவரது வேண்டுகோளை நிறைவு செய்தருளினார். ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் இணைந்து பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசித்துயரைத் துடைப்பதற்குச் சிவபெருமானை நோக்கிப் பதிகம் பாடிப் படிக்காசு பெற்றனர். அர்த்த சாமத்தில் அடைமழை பெய்யும் நேரத்தில், வறுமை வாட்டிய நிலையில் உணவு கேட்டுவந்த சிவனடியாருக்கு அன்போடு முகம் மலர்ந்து அமுதூட்டியவர் இளையான்குடிமாறநாயனார். அப்பூதியடிகள் மடங்களும் தண்ணீர்ப் பந்தல்களும் அமைத்து அடியார் தொண்டு செய்தார். இவற்றையும் இவை போன்ற வரலாற்றுச் சம்பவங்களையும் சேக்கிழார் பெருமான் தாம் இயற்றிய, திருத்தொண்டர் பெரிய புராணத்தில் சிறப்பித்துக் கூறியுள்ளார். இப் பண்பாடு சைவ மரபாக, சைவநெறியாக சைவத் தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வந்துள்ளன; இன்னமும் தொடர்கின்றன.

சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் மழையின்றி பஞ்சம் ஏற்பட்டபோது, மக்களின் பசிப்பிணியைப் போக்க, ஆங்காங்கு ஊர்கள்தோறும் கஞ்சித்தொட்டிகளை அமைத்துத் தொண்டு புரிந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். பிடியரிசி வழங்குவதன்மூலம் இப் புண்ணிய கைங்கரியத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு வீட்டாரையும் ஈடுபடுத்திய பெருமை நாவலரையே சாரும். "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" என்ற திரு மூலர் வாக்கு இங்கு நாவலர் பெருமானால் செயல் ஆகிறது.

நாவலரின் "பிடியரிசித் திட்டம்" மகத்தானது. யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தப்பட்டது. வெற்றியும் கண்டது. வெற்றிக்குக் காரணம் மக்களின் ஒத்துழைப்பும் நாவலர் பெருமானின் விடாமுயற்சியும் ஆர்வமும் ஆன்மீக உந்துதலுமேயாகும். இத் திட்டத்தின் பிரகாரம் தினமும் ஒவ்வொரு வீட்டாரும் சமைப்பதற்கு உலையில் போடுகின்ற அரிசியில் ஒரு கைப்பிடி அரிசியை

*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி எடுத்து ஒரு குட்டானில் (பனையோலையால் இழைக்கப்பட்டது) இட்டுச் சேகரிப்பர். அவ்வாறு ஒரு மாதகாலம் சேர்த்த அரிசியை ஏழைகளின் பசியைப் போக்க வழங்குவர். அவ்வரிசியைச் சேகரிக்கவென நாவலரின் தொண்டர்கள் கடமையாற்றினர். அதன் பின்னர் ஏழை மக்களிடம் பிரித்துக் கொடுப்பர்.

அந்தமாதிரிப் பசித்தோர்க்கு உணவளிக்கும் பண்பு, பண்டைக் காலத்திலிருந்து நாவலர் காலம் வரை சைவ மக்களிடையே சைவப்பண்பாடு பாரம்பரியமாகவே வளர்ந்து வந்துள்ளது. ஆனால் தற்காலத்தில் இப் பண்பு வேறு விதமாக உருவெடுத்துள்ளது. ஆலயங் களுக்கு அருகாமையில் எழுந்த மடாலயங்கள்; பணம் உள்ளவர்கள் தங்களின் இயல்புக்கு ஏற்றவாறு விருப்புடன் முகம் மலர்ந்து வழங்கும் அரிசி மூடைகள், காய்கறிகள் என்பன வற்றைப் பெற்றுத் தொண்டர்களின் உதவியுடன் அத்தகைய அன்னதானம் மற்றும் உடை வழங்குதல், இருப்பிடங்களை அமைத்துக் கொடுத்தல் என்பவற்றை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள், ஏதிலிகள், ஆதரவற்றவர்கள் ஆகியோருக்கு வழங்கி வருகிறார்கள்.

மேற்கூறியவாறு அத்தகைய பசித்துயர் துடைக்கும் பண்பாட்டினை, சைவ மக்க ளாகிய நாம் நன்குணர்ந்து அதனை மீளவும் வளர்க்க முயல்வோமாக. அதேவேளை "உண்ணும் உணவை பழித்தலாகாது" இது விரதமாகும். "உணவை வீணாக எறியலாகாது" இதுவும் விரதமாகும் எனும் உபநிடதக் கூற்றுக்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே. -திருமந்திரம்.

---

## நீங்கள் நீங்களாகவே இருங்கள்

ஒரு ஞானி மந்திரம் ஏதும் செய்யாது இருந்தார். அவரை அனைவரும் பைத்தியம் என்று கேலி பேசினர். அந்த ஞானி சொன்னார், "எனக்கு கடவுளிடம் எந்த வியாபாரமும் இல்லை. நம்மைக் காப்பாற்ற வேண்டுமா?, மூழ்கடிக்க வேண்டுமா? என்பது இறைவன் கவலைப்படவேண்டிய ஒன்று. அது என்னுடைய கவலை இல்லை. நான் பிறப்பதற்கு அவரிடம் கேட்கவில்லை. திடீரென இந்த பூமிக்கு நான் வந்தேன். ஆகவே மரணத்தைப் பற்றியும் நான் கேட்க முடியாது. எப்போது பிறப்பு என் கையில் இல்லையோ, மரணத்தைப் பற்றி மட்டும் எப்படி என் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும்?" என்று.

இதுதான் வாழ்க்கை. நமது கையில் ஒன்றும் இல்லை. வேண்டும் என்றால் முயற் சித்துப் பார்க்கலாம். ஆனால் அதற்கு தகுந்த பலனை இறைவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அதாவது கடமையைச் செய்ய இறைவனிடம் பலனை ஒப்படைத்துவிட வேண்டும். அனைவரும் இதனைப் புரிந்துகொண்டால் வாழ்க்கை எப்போதுமே குழப்பம் இல்லாமல் இருக்கும். நான் என்ற எண்ணத்தையும், எனது, எனக்கு என்ற உணர்வையும் உள்ளத்தில் இருந்து அகற்றுங்கள்.

*பொறுமையின் வழியே முயற்சித்தால் இழந்தது எல்லாம் நிச்சயம் கிடைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் மரக்கறி, 1மூடை அரிசி | 2500. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| R. யஷாந் | கொக்குவில் | 20000. 00 |
| S. பாக்கியம் | கொக்குவில் | 1புட்டி அரிசி |
| திரு பத்மகாந்தன் குடும்பம் | சுவிஸ்லன்ட் | 15000. 00 |
| மூ. வைத்திலிங்கம் | ஏழாலை | 1000. 00 |
| அ. ஜெயானந் | சுவிஸ் | 15000. 00 |
| R. கஜவர்ணி | கொக்குவில் | 1000. 00 |
| வே. கதிர்காமநாதன் | இணுவில் (கனடா) | 1மூடை அரிசி |
| கந்தசாமி களஞ்சியம் | கதிரிப்பாய் | 5000. 00 |
| S. செல்வக்குமார் | கரவெட்டி | 5000. 00 |
| திரு பரணிதரன் குடும்பம் | இணுவில் | 10000. 00 |
| மா. தங்கவேல் | சுன்னாகம் | 5000. 00 |
| திரு தங்கராஜா குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| ய. கலைமகள் | குடத்தனை | 2000. 00 |
| த. லக்சிகா | நவாலி | 3500. 00 |
| வி. கதிரவேலு | அச்சுவேலி | 1000. 00 |
| பு. அஸ்வதி | உடுப்பிட்டி | 1000. 00 |
| த. சற்குணநாதன் | கோண்டாவில் | 1000. 00 |
| ப. சாருஜன் | மல்லாகம் | 3000. 00 |
| திரு குட்டிப்பவுண் குடும்பம்<br>திரு தேவதாஸ் குடும்பம்<br>அபிஷன் அனுஷ்கா | மயிலிட்டி | 15000. 00 |
| S. மணிவண்ணன் | கரவெட்டி | 10000. 00 |
| S. ரட்ணசிங்கம் | குப்பிளான் | 25000. 00 |

நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் வெற்றியற்ற கொள்கையையே மேற்கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தி. ஜான்ஷிராணி | ஏழாலை | 5000. 00 |
| ம. யதுஷானி | ஏழாலை | 2000. 00 |
| ந. கனகரத்தினம் | சுன்னாகம் | 500. 00 |
| வே. கனகசபாபதி | ஏழாலை | 1000. 00 |
| ந. ஹரிசித் | மானிப்பாய் | 1000. 00 |
| செ. நிஷாந்தன் | ஆனைக்கோட்டை | 70000. 00 |
| அ. அருள்நாதன் | இணுவில் | 5000. 00 |
| யோ. லலிதாதேவி | தும்பளை | 5000. 00 |
| கந்தையா பிரியா | இடைக்காடு | 10000. 00 |
| சிவபாக்கியம் ஆறுமுகம் | பதுளை | 10000. 00 |
| ஆ. தர்ஷன் | இருபாலை | 5000. 00 |
| திருமதி பொ. பரிமளம் | கொழும்பு | 1000. 00 |
| திரு மோகனதாஸ் மூலம் நா. பெரியாம்பிள்ளை நினைவாக | பொலிகண்டி | 5000. 00 |
| செ. கலைவாணி | பொலிகண்டி | 2000. 00 |
| இ. குமாரதாசன் | இடைக்காடு | 3500. 00 |
| புவனேந்திரன் நிசாந்தன் | கனடா | 25000. 00 |
| க. குசலாதேவி | அளவெட்டி | 1700. 00 |
| கு. கனிஷ்கா | கோண்டாவில் | 5000. 00 |
| திரு சிவாகர் குடும்பம் | லண்டன் | 1புட்டி அரிசி |
| வே. ரஞ்சினிதேவி குடும்பம் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| சி. ராஜசுந்தரம் | லண்டன் | 10000. 00 |
| நித்திகா குடும்பம் | காரைநகர் | 5000. 00 |
| ஞா. கபிலன் | சண்டிலிப்பாய் | 50000. 00 |
| க. வித்தகன் | சண்டிலிப்பாய் | 15000. 00 |
| திரு தேவகுமார் குடும்பம் | சித்தங்கேணி | 10000. 00 |
| சோ. கிருபானந்தம் | நவாலி | 2000. 00 |
| கு. உமாதேவி | வவுனியா | 5000. 00 |
| பவளகிருஷ்ணன் உதிர்ஷியா | புத்தூர் | 15000. 00 |
| கதிர்மகள் குடும்பம் | கனடா | 20000. 00 |
| ம. விஜயசுந்தரம் | கனடா | 10000. 00 |
| த. அசோகமலர் | கனடா (நீர்வேலி) | 25000. 00 |
| வி. வேணுசாயி | கோப்பாய் மரக்கறி 2புட்டி அரிசி | 5000. 00 |
| வி. வினோஷன் | சுவிஸ்லன்ட் | 5000. 00 |
| ந. கீர்த்திகா | மட்டுவில் | 3000. 00 |
| A. அஸ்வின் | நெல்லியடி | 2000. 00 |
| திரு குமார் குடும்பம்<br>திரு ராஜேந்திரன் குடும்பம்<br>திரு சிவகுமார் குடும்பம் | யாழ்ப்பாணம் | 7000. 00 |

*உனது ஒவ்வொரு தவறும் உன் எதிரியை உத்தமனாக்கிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ராஜேஸ்வரி | கனடா | 22000. 00 |
| அ. தர்மினி | இத்தாலி | 10000. 00 |
| செ. பகீரதன் | சுன்னாகம் | 5000. 00 |
| ஆ. கபாஸ்கர் | இணுவில் | 6000. 00 |
| அருள் விநாயகர் மோட்டோர்ஸ் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| K. அருளானந்தராஜா | ஜேர்மன் | 10000. 00 |
| தியாகராசா சுஜதசி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| திரு ஞானம் குடும்பம் | லண்டன் | 35500. 00 |
| ஆ. சுதர்சன் | கரவெட்டி | 5000. 00 |
| S. வனிதா | மல்லாகம் | 6000. 00 |
| M. மிதுன் | சிறுப்பிட்டி | 2000. 00 |
| க. தங்கவேல் நினைவாக | குப்பிளான் | 3000. 00 |
| திரு நிரோஜன் குடும்பம் | பிரான்ஸ் மரக்கறி, தே.எண்ணெய், 5k அரிசி | |
| சு. கோசலைகோபன் | இமையாணன் | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 4 புட்டி பருப்பு |
| S. மோகனதாஸ் | இணுவில் | 5000. 00 |
| க. சண்முகநாதன் | இணுவில் | 1000. 00 |
| வை. கலைநாதனி | ஆவரங்கால் | 500. 00 |
| திரு புருஷோத்தமன் | புத்தூர் | 25k தீட்டல் அரிசி |
| க. சிதம்பரநாதன் | மல்லாகம் | 2000. 00 |
| யோ. வரதராஜா | திருகோணமலை | 15000. 00 |
| ர. பூரணமூர்த்தி | கோண்டாவில் | 25000. 00 |
| சிந்துஜா சஜந்தன் | சுதுமலை | 25000. 00 |
| ப. வல்லிபுரநாதன் நினைவாக | உடுப்பிட்டி | 5000. 00 |
| திரு மகாதேவன் குடும்பம் | உடுப்பிட்டி | 5000. 00 |
| திரு தங்கவேல் நினைவாக | விசுவமடு | 5000. 00 |
| சு. மனோகரன் | கரவெட்டி | 6000. 00 |
| பொ. குமாரசாமி ஆசிரியர் | பத்தமேனி | 3000. 00 |
| ஆ. நிஷாந்தினி | உடுப்பிட்டி | 5000. 00 |
| பாஸ்கரன் ரஜிதா | மாலிசந்தி | 20000. 00 |
| சு. சியாம், சு. வர்சினி | அச்சுவேலி | 10000. 00 |
| தி. தயாபரன் | தெல்லிப்பழை | 5000. 00 |
| பா. செந்தில்குமார் | கட்டார் | 5000. 00 |
| பு. ஜெபமணி | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| இ. வாகீசன் | இணுவில் | 1000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 2000. 00 |
| ஜெ. ஓவியன் | சோழங்கன் | 2000. 00 |

*முதல் தவறு, இரண்டாவது தவறுக்கு இருக்கையைத் தயார் செய்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| க. ஆரன் | கனடா | 20000. 00 |
| தி. கார்த்திகா | வதிரி | 10000. 00 |
| க. கமலரூபன் | சுன்னாகம் | 5000. 00 |
| ச. தாருஸ் | நல்லூர் | 2000. 00 |
| ச. திருநாதன் | கனடா | 30000. 00 |
| இலங்கை வங்கி | பருத்தித்துறை | 2500. 00 |
| நி. நிதாரணி | கோப்பாய் | 2000. 00 |
| செ. யோகேஸ்வரன் | அச்சுவேலி | 1000. 00 |
| P. சஞ்சயன் | தெகிவளை | 35000. 00 |
| திரு சந்திரராஜன் | ஆரையம்பதி | 1000. 00 |
| சி. சந்திரகலா | கதிரிப்பாய் | 50000. 00 |
| M. லக்சனா | சங்கானை | 15000. 00 |
| ரா. கவின்ராஜ் | இணுவில் | 5000. 00 |
| திரு நாகராஜா குடும்பம் | சுன்னாகம் | 5000. 00 |
| சு. சர்மிலன், சு. அபிசன் | லண்டன் | 50000. 00 |
| ச. இரத்தினசிங்கம் நினைவாக | அச்சுவேலி | 5000. 00 |
| கோகுலன் கியானி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| தி. தேவராசன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சு. ஜெயரூபன் | கோண்டாவில் | 5000. 00 |
| வைசாளினி | காரைநகர் | 5000. 00 |
| பூ. சோதிநாதன் | தெல்லிப்பழை | 5000. 00 |
| செ. வாசுசன், செ. வரிஸ்வீன், செ. வர்ஷியா | கனடா | 10000. 00 |
| வை. தயாபவன் | இடைக்காடு | 25000. 00 |
| பி. சிவேஸ் | கைதடி | 10000. 00 |
| வே. பாண்டியர் | கைதடி | 1000. 00 |
| க. திருவருட்செல்வன் | கொழும்பு | 10000. 00 |
| திரு ரவிச்சந்திரன் குடும்பம் | தெல்லிப்பழை | 2000. 00 |
| க. கைலைநாதன் குடும்பம் | மானிப்பாய் | 10000. 00 |
| ஹம்சா பாஸ்கரன் | கனடா | 50000. 00 |
| பி. வசந்தாதேவி | ஊரெழு | 100 பவுண்ஸ் |
| Dr தங்கமுத்து கோணேஸ்வரன் | வவுனியா | 5000. 00 |
| கி. தவராசா | பருத்தித்துறை | 4000. 00 |
| திரு சதீஸ்குமார் குடும்பம் | பண்டத்தரிப்பு | 25000. 00 |
| திரு பிரேமானந்தசுந்தர் | உரும்பராய் | 5000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் உறையும் இடங்கள்

– *திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு* அவர்கள் –

இனிய காலை நேரம். பறவைகளின் ஒலி ஒரு புறம். இன்னும் ஒரு 5 நிமிடம் தூங்குவமோ எனக் கெஞ்சுகிறது உடம்பு. எழுந்திரு ஆற்றவேண்டிய கடமைகள் நிறைய உண்டு என்கிறது உள்ளம். இந்த வேளையில் உங்களுடன் ஒரு நல்ல சிந்தனை.

இயற்கையில் அழகு உண்டு. அழகில் இறைவன் உறைகிறான். எனவே இயற்கையில் எங்கும் இறைவன் உறைகிறான். அவன் சர்வ வியாபகன் அல்லவா? இயற்கையைக் காண முடிகிறது. இறைவனைக் காண முடிவதில்லை இங்கு ஒரு வித்தியாசம். அதற்காக இறைவனே இல்லை என்று சொல்லிவிட முடியுமா. காற்றைக் கண்ணால் காண்கிறோமோ? இல்லையே, அதனால் காற்றே இல்லை என்றாகிவிடுமா?

சிந்திக்க எவ்வளவோ இருக்கிறது. நேரம்தான் போதவில்லை. இயற்கை எழில் ததும்பும் இடங்கள் பெரிய மகான்கள் வாழ்ந்த ஆச்சிரமங்கள் இவை எல்லாம் புனிதமானவை. இவற்றை புண்ணிய தலங்கள் என்றே கூறிவிடலாம்.

எம்முள்ளேயே இறைவன் இருக்க நாம் இறைவனை எங்கெங்கெல்லாமோ தேடுகின்றோம். எம்முள்ளே இறைவனா என்று கேட்கிறீர்களா?

ஆமாம் எம்முள்ளேயும் இறைவன் உள்ளான் அவன்தான் எமது மனச்சாட்சி. சில சமயங்களில் மனச்சாட்சியின் ஒலி எம் செவிகளில் வீழ்ந்து, நாமே நமது தவறை உணர்ந்து கொள்கின்றோம். ஒப்புக்கொண்டும் விடுகின்றோம். எனவே இறைவன் எமக்கு அகத்தும் புறத்தும் உள்ளான்.

எமக்கு வெளியே எத்தனை பெரிய கோயில்கள், கோபுரங்கள், விமானங்கள், மண்டலங்கள், ஸ்தல விருட்சங்கள். இவை எல்லாம் புறச் சின்னங்கள். இவை எல்லாம் இடைக்காலத்தில் வந்தவை. பாமர மக்களுக்கு வழிகாட்ட அவர்கள் வழிபட்டு உய்ய இவை அவசியம்.

வேத காலத்தில் இத்தகைய ஆலயங்கள் இருந்ததில்லை. இயற்கையின் அம்சங்களே வழிபாட்டுக்குரியனவாக அமைந்தன. வேள்வித் தீயின் மூலம் வழிபாடு பெரிதும் நிகழ்ந்து வந்தது.

நதிக்கரையிலும் சோலைகளிலும் தெய்வ வணக்கம் இடம்பெறலாயிற்று. பெரு விருட்சங்கள் நாளடைவில் ஸ்தல விருட்சங்கள் ஆயின.

காலம் மாற ஆகமங்கள் கூறியுள்ளதை அனுசரித்து ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அவை எமது உடலிலும் உலகிலும் உள்ள தத்துவங்களை விளக்குவதாக அமைந்தன. உருவ வணக்கமும் ஆரம்பித்தது. இது ஒரு புறமிருக்க, அண்டம் எங்கும் குடிகொண்டுள்ள இறைவன் எமது சரீரத்திலும் வீற்றிருக்கின்றார் என்பது மகான்கள் வாக்கு.

மானுட சரீரமே ஆலயங்களில் மிகச் சிறந்தது என்பதும் மகான்கள் மொழிந்ததே. ஆனால் சரீரத்தில் உள்ள தெய்வத்தை அறிந்துகொள்ள, இக்கோட்பாட்டை எளிதில் புரிந்துகொள்ள, எமக்கு பக்குவம் தேவை.

*நம் எதிர்காலத்தை நாமே உருவாக்குகிறோம். அதை விதி என்கிறோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பக்குவம் பெற ஆலயங்கள் எமக்கு உதவலாம் அல்லவா? ஆலயங்களையும் நாம் எமது போக்குக்கு உகந்தவாறு கட்டிவிடமுடியாது. இது தவறு. ஆகமங்களில் விதித்தவாறே ஆலயங்களை அமைக்கவேண்டும் என்பதும் கோட்பாடு.

கல்லைக் குடைந்து கோயிலை எழுப்பினர் பண்டைய தமிழ் மன்னர்கள். கல்லிலே கலை வண்ணமும் கண்டனர், காட்டினர். ஆனால் அங்கும் விதிமுறைகள் பின்பற்றப்பட்டன.

ஆலயம் என்றதும் எம் மனக்கண் முன்னே தோன்றுவது வானளாவிய கம்பீரமாக அமைந்த ராஜகோபுரம்தான். இதனைத் தூலலிங்கம் என்பர்.

ஊருக்கு ஒரு கோயில். அங்கே ஒரு ராஜகோபுரம் வருவோரை வா என்றழைப்பது போல் உயர்ந்து எல்லோர் கண்ணுக்கும் கம்பீரமாக காட்சி அளிக்கின்றது. அதனைக் கண்டதும் அஃது மனதில் தெய்வ சிந்தனையை உருவாக்குகின்றது. எத்தனை நல்ல பணியை அது ஆற்றுகிறது பாருங்கள்.

ராஜகோபுரத்தின் அருகே வந்து, சிறிது நேரம் அதனை உற்றுப் பாருங்கள். எங்களில் எத்தனை பேர் அதனை நுணுக்கமாகப் பார்த்திருக்கிறோம்.

ஏதோ கோயிலுக்கு வந்தோம். காலைக் கழுவினோம் என்று அவசர அவசரமாக உள்ளே நுழைந்து விடுகின்றோம். அவ்வாறில்லாமல் கோயில் வாயிலில் சற்று நின்றுதான் அந்த அழகான கோபுரத்தை அண்ணாந்து பார்ப்போமே.

அத்தனை காட்சிகள் அதன்மேலே, எத்தனை சிற்பங்கள் அங்கு அமர்ந்து எமக்கு கதை கதையாகக் கூறுகின்றன. இவற்றை எல்லாம் விட்டு நாம் அவசரமாக உள்ளே செல்லலாமா? புராணங்கள் கூறும் கதைகளை, ராஜகோபுரத்தில் உள்ள சிற்பங்கள் எத்தனை அழகாக எமக்கு சொல்லாமல் சொல்லிக் காட்டுகின்றன.

நாரத முனிவர் கொண்டுவந்த மாங்கனியைப் பெற முருகப்பெருமான் மயில்வாகனனாக உலகை வலம் வந்தமை அதே கனியைத் தான்பெற ஞான விநாயகன் தந்தை தாயை வலம் வந்தமை, வீணைக்கொடியோன் இராவணேஸ்வரன் கைலை மலையைப் பெயர்த்தமை, எம்பிரான் சம்பந்தப்பட்ட எத்தனை வரலாறுகளை ராஜகோபுரத்தின் சிற்பங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இது எமது ஆலயங்களின் ராஜகோபுர மகிமை. இதனாலேயே "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்று எம் முன்னோர்கள் கூறிப் போற்றினரோ!

ராஜகோபுரத்தில் பல வாயில்கள் ஒன்றன்மேல் ஒன்று அமைந்திருந்த போதும், ஆலயத்தினுள் செல்லத் தரைமட்டத்திலே உள்ள ஒரு வாயில் மாத்திரம்தான் எமக்கு உதவுகிறது.

அதாவது பல புறக் காரணங்களும் அகக் காரணங்களும் எம்மிடத்தே இருக்கின்றதெனினும் கடவுள் நாட்டம் கொள்ளும்போது எமது மனம் என்னும் ஒரு காரணம்தான் நமக்குப் பெரிதும் பயன்படுகின்றது. எனவே மனம் என்னும் காரணத்தை துணையாகக் கொண்டே நாம் பரம்பொருளை நோக்கிச் செல்லலாம் என்பதை ராஜகோபுரத்தின் தரைவாயில் எமக்கு விளக்கிக் காட்டுகின்றது. எனவே, சர்வ வியாபகனான ஈசனே எமக்கு சர்வமும், சகலதும்.


"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

***முட்டாளைச் சமாளிக்க சுருக்கமான ஒரு வழி மௌனமாக இருப்பதுதான்.***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




பளை தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் கணனி கல்விக்காக 180,000 ரூபா பெறுமதியான 02 கணனிகள் வழங்கப்பட்டன.

யா/ பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு 230,000 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளில் நவக்கிரி அச்சுவேலியைச் சேர்ந்த தரம் 07 மாணவனுக்கும், யா/ நல்லூர் ஸாதனா சி/சி/த.க பாடசாலையில் தரம் 07இல் கல்வி கற்கும் மாணவிக்கும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டது.



வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுங்கேணி, பெரியகுளம் பிள்ளையார் ஆலய மீள் கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபா நிதியும், கிளிநொச்சி கோணாவில் கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு சிறுநீரகமும் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு விவசாய தேவைக்காக 260.000 ரூபா பெறுமதியான ஆள்துழைக் கிணறும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் நவராத்திரி விழாவுக்காக 20,000 ரூபா நிதியும், கேப்பாப்பிலவு - வற்றாப்பளையைச் சேர்ந்த வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவிக்கு துவிச்சக்கரவண்டியும் வழங்கப்பட்டது.



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்திசாலையில் நிர்மானிக்கப்பட்டுவரும் விநாயகர் ஆலய கட்டிடப் பணிக்காக 500,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

உன் வாழ்க்கையை நீ உண்மையாக நேசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகத்தினருக்கு முதியோர் தினத்தை முன்னிட்டு 87,500 ரூபா பெறுமதியான 35 பெட்சீட், 35 சேலையும், திருகோணமலை பெரியகடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கட்டிடப் பணிக்காக 100,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தளம், சேனைக்குடியிருப்பு, மணல்குன்று, அபயபுர பிரதேசங்களைச் சேர்ந்த பல்லின மதங்கள் சார்ந்த 63 மாணவர்களைத் தெரிவுசெய்து 136,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

புத்தளம் சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் உள்ள 175 மாணவர்களுக்கு உணவுப்பெட்டி, பிஸ்கட் என்பன வழங்கப்பட்டன.




எட்டி வைத்து முயன்றால் எல்லாமே எட்டிவிடும் தூரம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்.



சிறந்த புத்தகங்களே மிகச் சிறந்த நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி மண்ணில் மாபெரும் கந்தபுராண விழா

– திரு இ. இராகவன் அவர்கள் –

கந்தபுராண விழா மூன்று நாட்கள் விழாவாக சிறப்பாக திரு பெரிய ஐங்கரன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

முதலாம் நாள் நிகழ்வு மாயக்கை சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது. இங்கு வடமராட்சியில் கந்தபுராண கலாசாரம் எனும் பெரிய ஐங்கரன் எழுதிய நூல் வெளியீடு செய்துவைக்கப்பட்டது. அத்துடன் கந்தபுராண படனம் செய்யும் பௌராணிகர்களுக்கு கந்தபுராண காவலன் விருது இருபது பௌராணிகர்களுக்கு வழங்கி கௌரவம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் அவர்கள் கலந்துகொண்டார். ஓய்வுநிலை அதிபர் ஆறுமுகம் சிவநாதன் அவர்கள் நூல் நயப்புரை நிகழ்த்தினார். நூலாசிரியர் ஆலய அறங்காவலர்களால் கௌரவிக்கப்பட்டார். ஐங்கரன் ஏற்புரையை நிகழ்த்தினார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சைவப்புலவர் அனுசாந்தன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இங்கும் இருபத்தைந்து பௌராணிகர்களுக்கு கந்தபுராண காவலன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. நூல் சிறப்புப்பிரதி வழங்கலும் நூலாசிரியரை அல்லையம்பதி ஆலய பிரதமகுருவும் நிர்வாகத்தினரும் இணைந்து கௌரவித்தனர்.

மூன்றாம் நாள் விழா முருகப்பெருமான் உயிர்ப்புடன் வாழும் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. ஆச்சிரம சுவாமி அமுதவாரிதி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் அவர்கள் ஆசிவழங்கி மங்கல விளக்கேற்றி முருகன் பெருமை பேசும் கந்தபுராண விழாவை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகள், மாயக்கை ஆலய அறங்காவலர் நா. சோதிநாதன், கலாபூஷணம் பசுபதி ஐயா, நூலாசிரியர் பெரிய ஐங்கரன் ஆகியோர் உட்பட சில பௌராணிகர்கள் மங்கல விளக்கினை ஏற்றி வைத்தனர்.

கந்தபுராண கடவுள் வாழ்த்தினை குடாநீரூரான் பசுபதி அவர்கள் மிகுந்த பக்தியோடும் இறை பண்ணோடும் ஓதினார். வரவேற்புரையை பௌராணிகர் இளையதம்பி இராகவன் நிகழ்த்தினார். வாழ்த்துரையை ஆன்மீக வித்தகர் ஆறுமுகம் சிவநாதன் அவர்கள் வழங்கினார்.

மூன்றாம் நாள் கந்தபுராண விழாவை பருத்தித்துறை பிரதேச செயலர் சி. சத்தியசீலன் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். அவரது உரையில் கந்தபுராண படனம் சுவையிழந்து வரும் நிலையில் மூன்று நாள் விழாவினை வடமராட்சியின் மூன்று வெவ்வேறு இடங்களில் ஒழுங்கமைத்து நடத்துவதென்பது அபரிமிதமான ஆற்றல் தேவை. அதனை நிகழ்த்திய

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனை நினைத்து பெருமையடைகிறேன். முருகன் பெருமையை பேணும் இப் புராணத்தை ஓதுவோரை அடையாளம் கண்டு அவர்களை ஓர் இடத்தில் கூட்டி கௌரவித்து விருது வழங்கியமை முருகனின் அருளாலேயே சாத்தியப்படும் எனக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் கந்தபுராண கலாசாரமும் யாழ்ப்பாணமும் எனும் தலைப்பில் அரங்கு நிறைந்த அடியார்கள் மத்தியில் உரையாற்றினார். கச்சியப்பரால் கந்தபுராணம் இயற்றப்பட்ட காலத்திலேயே அராலி முருகன் ஆலயத்தில் இந்த புராணபடனம் ஆரம்பிக்கப்பட்டது. அதனாலேயே வடமராட்சியை உள்ளடக்கி கந்தபுராண கலாசாரமும் யாழ்ப்பாணமும் எனும் தலைப்பை தேர்ந்தெடுத்தேன் என கூறிய அவர் புராணபடனம் நூல் வடிவில் வெளிவராத அக்காலத்தில் பெண்களே கூட்டம் கூட்டமாக ஆலயத்திற்குச் சென்று புராண படனக் கதைகளை கேட்டு கிராமங்களில் பரப்பியவர்கள் என பதிவு செய்தார். ஐங்கரனின் பணி சாதாரணமானதன்று. யாழ்ப்பாணத்திற்கே உரிய கந்தபுராண கலாசாரத்திற்கு ஒரு அடையாளத்தையும் சைவத்திற்கு ஒருவரும் நினைத்துப் பார்க்காத ஒரு பக்கத்தை திறந்துள்ளார். இது புரட்சிகரமான நிகழ்வாகும் என உரையின்போது கூறினார்.

தலைமை வகித்து உரையாற்றிய நந்தகுமார் அவர்கள் சந்நிதியானைத் தளமாகக் கொண்டு பௌராணிகர் அனைவரையும் இணைத்து கழகம் ஒன்றினை அமைத்து பௌராணிகர் அனைவரையும் அங்கத்தவராகக் கொண்டு ஆறுமுகநாவலர் அறிவுறுத்திய கந்தபுராண கலாசாரத்தை வளர்க்க முடியும். பல ஆலயங்களில் புராண படனத்தைப் படிப்பதற்கு இலகுவாக இருக்கும். அதேநேரம் பௌராணிகர்களின் நலன்களையும் பேணமுடியும் எனக் கூறினார்.

பிரபல சொற்பொழிவாளரும் யாழ் பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆங்கில போதனாசிரியர் திரு ச. விநாயகமூர்த்தி அவர்கள் கந்தபுராணத்தில் நவையுறு காட்சி எனும் பொருளில் சொற்பொழிவாற்றினார். புராணத்தில் உள்ள சிறப்பு பாடல்களைச் சுட்டி அவர் கூறிய கருத்தானது அவையோர் புராண அருளமுதத்தை உளமுருக இரசிக்கும்படி அமைந்திருந்தது.

பின்னர் பிரதம விருந்தினர் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் உரை வழங்கினார். கந்தபுராண பௌராணிகர்கள் புராணபடனத்தை பக்தியோடும் ஆசாரமாகவும் ஓதவேண்டி சைவப்பணிபற்றி எடுத்துக் கூறினார். வடமராட்சியில் கந்தபுராண எழுச்சிபற்றியும் அதன் தொடர்ச்சி பற்றியும் சந்நிதி சூழலில் இவ்விழா எடுத்ததன் சிறப்புப்பற்றியும் இவ்விழாவின் ஏற்பாட்டாளர் ஐங்கரன் பணியை வியந்து பாராட்டினார்.

அதனைத் தொடர்ந்து மோகனதாஸ் சுவாமிகளுடன் பேராசிரியர் தம்பதிகளும் இணைந்து கந்தபுராண காவலன் விருதினை புராண வித்தகர்கள் திரு விநாயகமூர்த்தி, திரு பசுபதி, திரு பஞ்சலிங்கம் உட்பட்ட முப்பத்திரண்டு பேருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். ஏற்பாட்டாளர் திரு பெரிய ஐங்கரன் அவர்கள் நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் உளமுருகி தனது பணியின் நோக்கம் அதன் வளர்ச்சிப்போக்கு தொடர்பாக சிறப்புரையொடு நிகழ்வு நிறைவடைந்தது.

***மனிதனின் இயற்கையான குணம் சிறப்பாக சிந்திப்பதாகும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் நாள் நிகழ்வில் பார்வையாளர்களாகக் கலந்துகொண்ட கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் மு. கனகலிங்கம் கருத்து தெரிவிக்கையில், மொழிபற்றிய ஆராய்ச்சி செய்பவர்கள் மொழிகளின் சிறப்பம்சங்கள் பற்றி கூறியுள்ளார்கள். ஆங்கில மொழி வர்த்தக நடவடிக்கைகளுக்குரிய சிறப்பு மொழி என்றும் இலத்தீன் மொழி சட்ட ஆக்கத்திற்கு தகுந்த மொழி என்றும் சீனமொழியின் வரிவடிவம் சித்திரங்களை வெளிப்படுத்தும் சிறப்பு மிக்கன என்றும் கூறியுள்ளார்கள். தமிழ் மொழியானது பக்தி இலக்கியங்களைக் கொண்டிருப்பதில் சிறப்பானது என்று கூறியுள்ளார்கள். அதாவது தரமான பக்தி இலக்கியங்கள் தமிழ்மொழிபோல் வேறு மொழிகளில் இல்லை. கந்தபுராணம் ஓர் சிறந்த பக்தி இலக்கியமாகும்.

எங்கள் ஆலயங்களில் கந்தபுராணபடனம் கலாசாரம் நல்லை நகர் நாவலரால் ஆரம்பிக்கப்பட்டு தற்போதுவரை ஆலயங்களில் புராணபடனம் நடைபெற்று வருகின்றது. சில இடங்களில் அது இல்லாமல் போய்விட்டது. காலமாற்றம் சிலவற்றை சிதைத்து வருகின்றது.

உண்மையில் தமிழையும் சைவத்தையும் காக்கும் பெரும் பணியைச் செய்துவரும் இந்த பௌராணிகர்களும் போராளிகள்தான். இந்த புராணபடன நிகழ்விற்கு சமூக மட்டத்தில் பெரிய வரவேற்பு இல்லை எனினும் இந்த பௌராணிகப் போராளிகள் தங்களின் இலட்சியத்தில் உறுதியாக நின்று பணியைத் தொடர்கின்றார்கள். நான் பௌராணிகன் அல்ல. ஆனால் ஆதரவாளன்.

இந்த விழாவிலே பெரிய ஐங்கரன் எழுதிய கந்தபுராண கலாசாரம் என்ற அழகான புத்தகம் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த புத்தகத்திலே 66 பௌராணிகர்கள் பற்றிய விபரங்கள் தனித்தனியாக பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் விரும்பிய கந்தபுராண பாடலொன்றும் இறுதியில் கொடுக்கப்பட்டு வாசிப்போருக்கு உற்சாகம் ஏற்பட வழி ஏற்படுத்தப் பட்டுள்ளது. திரு பெரிய. ஐங்கரன் அவர்கள் தனியொரு ஆளாக நின்று இப் பெரும் பணியைச் செய்து முடித்துள்ளார். பாராட்டுக்கள் நன்றிகள்.

---

*ஒருவனிடம் தர்ம சிந்தனை இருக்கும்பொழுது, அந்தத் தர்மமே அவன் எதிர்காலத்தைப் பார்த்துக்கொள்ளும். ஏன் என்றால், ஒரு மனிதன் என்ன பிரார்த்தனை செய்தாலும், எத்தனை மந்திரங்கள் உரு ஏற்றினாலும், எத்தனை அபிசேகங்கள், யாகங்கள் செய்தாலும்கூட, அவனிடம் உதவும் குணம் இல்லை என்றால் இறை அருளைப் பெற முடியாது.*

*ஒரு மனிதன் இறை அருளைப் பெறவேண்டுமென்றால், ஏன்? இறை நம்பிக்கை இல்லாவிட்டாலும் கூட பரவாயில்லை. தர்ம குணமும், பிறருக்கு உதவும் குணமும் இருந்துவிட்டால் போதும். இவன் இறையைத் தேடவேண்டியதில்லை. இறை இவனைத் தேடி வந்துவிடும். எவன் அதிக அளவு தர்மம் செய்கிறானோ அவனிடம் இறையே வந்து கையேந்தும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணம் சூரன்போர்

– திரு செ. சிவபாதம் அவர்கள் –

முருகப் பெருமான் சூரபன்மனைக் கொல்லவில்லை. அவனது ஆணவத்தை அடக்கி சேவலும் மயிலுமாக ஆட்கொண்டார். இத்துடன் தேவர்களது சிவத்துரோகமாகிய பாவத்தையும் நீக்கி அவர்களையும் ஆட்கொண்டார்.

சூரபன்மன் யுத்தகளத்தில் நடந்த போரில் தமது சகோதரர், பிள்ளைகள், மந்திரி மார்கள், நால்வகைப் படைகள் யாவற்றையும் இழந்து தான் தனித்தவனாக நின்று முருகப்பெருமானுடன் போர் செய்தான். அப்போது அவன் பலபல மாய வடிவங்களை எடுத்து முருகப்பெருமானுக்குப் பக்கமாக வர அப்போது அவர் தமது அம்புகளால் இவற்றை அழித்துப் பின்பு சூரபன்மனைப் பார்த்து சூரனே நீ இவ்வளவு நேரமும் எமக்கு முன்பாக பல பல மாய வடிவங்களை எடுத்து வந்தாய். இவற்றை எல்லாம் நாம் இப்போது அழித்தோம். இப்போது நாம் எப்போதும் அழிவில்லாத ஒரு திருப்பெரு வடிவத்தை எடுத்து நீ காணும்படி காட்டுவோம். இதனை தரிசித்துக்கொள் என்று கூறி அறிவுள்ள சீவராசிகளையும் அறிவில்லா சடப்பொருள்களையும் தமது திருமேனியில் உருவகப்படுத்தி (வெளிப்படுத்தி) காட்டி சூரபன் மனின் சிற்றறிவை ஞான அறிவாக மாற்றியமைக்க அவன் அப்போது தான் கண்ட திருப் பெருவடிவத்தைப் பார்த்து வணங்கி மகிழ்ச்சியடைந்து பின்வருமாறு கூறுவான்.

எனது கால்கள் இப் பெருமானை மூன்று முறை சுற்றிவர விரும்புகின்றன. கைகள் வணங்க விரும்புகின்றன. தலை தாழ்ந்து வணங்க விரும்புகின்றன. நாக்கு புகழ்ந்து பாட விரும்புகின்றன. இப்போது நான் தீமை முழுவதும் நீங்கி இவரிடத்தில் அன்புடையவனாகி இறைபணி செய்து அடியவனாய் வாழ்தலை என் மனம் விரும்புகிறது. இதனை முன்பு செய்யாமல் தடுத்தது மானம் என்று சொல்லப்படும் சீவகுணம் ஆகும். மேலும் பலவற்றைக் கூறிப் புகழ்ந்து வணங்கி நின்றான். இதனை சிவஞானபோதம் 9ஆம் சூத்திரம் ஊனக்கண் பாசம் உணராப்பதியை ஞானக் கண்ணில் சிந்தை நாடி என்ற இலக்கணத்துக்கு இலக்கியமாக நின்றான் என்று கூறுகிறது. சூரபன்மன் இப்படியாக முருகப்பெருமானை புகழ்ந்து வணங்கி நிற்கும்போது முருகப்பெருமான் தமது திருப்பெருவடிவத்தை மாற்றி மீண்டும் இந்திரனாகிய மயில்வாகனத்தில் எழுந்தருளி சூரபன்மனது ஞான அறிவை மாற்றி மீண்டும் அவனை சிற்றறிவுடையவனாகச் செய்தார். அப்போது சூரபன்மன் கோபமடைந்து இருள்வடிவத்தை எடுத்து அதற்குள் மறைந்து நின்று தேவர்களை பிடித்து விழுங்குவதற்கு ஆகாய மார்க்கமாக போனான். இதனை அவதானித்த தேவர்கள் பயந்து ஓடிஓடி முருகப்பெருமானை வணங்கி

**பணம் இருந்தால் உன்னை உனக்கு தெரியாது. பணம் இல்லையேல் யாருக்கும் உன்னைத் தெரியாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருமாறு சொல்லி வேண்டுகிறார்கள்.

நண்ணினர்க்கு இனியாய் ஓலம் ஞானநாயகனே ஓலம்
பண்ணவர்க்கு இறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற்கு அரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்.

முருகப்பெருமானே சூரபன்மன் எங்களைப் பிடித்து விழுங்கும்படி வருகிறான். ஆதலால் நீங்கள்தான் இப்போது எங்களை பாதுகாக்க வேண்டுமென்று கூற அப்போது முருகப்பெருமான் தமது திருக்கரத்திலுள்ள பெரிய பஞ்ச பூதங்களையும் அழிக்கக் கூடியதும், எந்த வீரர்மீதும் செலுத்தினாலும் அவர்களது வரங்களையும் அழித்து உயிரைக் கொல்வதும், தேவர்களது படைக்கலங்களுக்கெல்லாம் தலைமை பொருந்தியதும், ஞான ஒளி வீசும் வேற்படையைப் பார்த்து பின்வருமாறு கூறுவார்.

வேலாயுதமே இப்போது சென்று சூரபன்மனது மார்பைக் குத்திப் பிளந்து இரு பிளவாகும்படி செய்து மீண்டும் எம்மிடத்தில் வருவாயாக என்று கூறி அனுப்பினார். இவ்வாறு சொல்லி விடப்பட்ட வேலாயுதமானது அளவிடமுடியாத ஞான ஒளிப் பிரகாசத்துடன் செல்ல சூரபன்மனின் இருள் வடிவம் அப்போது அவனைவிட்டு நீங்கியது. (இதைச் சிவஞானபோதம் 7ஆம் சூத்திரம் சத்தெதிர் யாவையும் சூனியம் என்று கூறுகிறது.) அதாவது ஞானசக்தியாகிய வேலாயுதத்துக்கு முன்பாக உலகியல் மாயப் பொருள்கள் முனைந்து நிற்க முடியாமல் அழிந்துபோய்விடும். அப்போது சூரபன்மன் கோபமடைந்து கடலின் நடுவே ஒரு பெரிய மாமரமாக நின்று சிறிது நேரம் இம் மா மரத்தை அசைத்தான். அப்போது கீழ் உலகங்களும் நிலைகுலைந்தன. மலைகள் வெடித்தன. கடல்களும் உடைந்து ஒன்றாயின. இதனை அவதானித்த வேலாயுதமானது கோபமடைந்து பார்த்தவர்கள் அஞ்சத்தக்க மறக்கருணை வடிவத்துடன் சென்று சூரபன்மனது மாமர வடிவத்தை வெட்டி அழித்ததும் சூரபன்மன் ஆரவாரித்துக்கொண்டு விழுந்தும் அவன் இறக்கவில்லை. இதற்குக் காரணம் அவன் செய்த தவமே. அப்போது சூரபன்மன் தன்னுடைய பழைய உருவத்தோடு வந்து வாளை வீசிக்கொண்டு வர வேலாயுதம் அவனது உடம்பைக் குத்திப் பிளந்து சூரன் பதுமன் என்பவரது உடம்பையும் வெவ்வேறாகும்படி செய்துவிட்டு வேதங்கள் முழங்க ஆகாய மார்க்கமாகச் சென்றது. (சூரபன்மனது ஆணவம் எனது நான் என்று இரு கூராக்கப்படுகிறது.) ஆணவம் தொழில்பட முடியாத நிலையிலுள்ளது. இப்படியாகச் சென்ற வேலாயுதமானது பிரம்மா முதலிய தேவர்கள் வாழ்த்தி சிந்தும் பூமழையினூடாகச் சென்று தனது மறக்கருணை வடிவமாகிய அக்கினி வடிவத்தை மாற்றி திருவருள் வடிவத்தையுடையதாகி ஆகாய கங்கையில் மூழ்கி முருகப்பெருமானது திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது.

புங்கவர் வழுத்திச் சிந்தும் பூமழையிடையினேகி
அங்கியின் வடிவம் நீங்கி அருள் உருக்கொண்டு
வான்றோய் கங்கையில் படிந்துமீண்டு கடவுளர் இடுக்கண் தீர்த்த
எங்கள் தம்பெருமான் செங்கை எய்தி வீற்றிருந்தது அவ்வேல்.

***இடைவிடாத முயற்சியும் எப்போதும் மலர்ந்த முகமும் அறிவின் அறிகுறிகள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது சூரன் இருந்த உடம்பு மயிலாகவும் பதுமன் இருந்த உடம்பு சேவலாகவும் மாறி மீண்டு இருவரும் முருகப்பெருமானுடன் போர் செய்யும் படிவர அப்போது முருகப்பெருமான் தமது திருவருள் பார்வையால் இவர்களது பசுகரணங்களை பதிகரணங்களாகவும் சிற்றறிவை ஞான அறிவாகும்படி மாற்றி தமது திருவருளின் கட்டுப்பாட்டுக்குள் அடக்கிவிட்டார். இது எப்படியென்றால் அனுபூதி மகான்களின் பார்வையால் கறுத்த இரும்பு பொன்னாக மாறியதைப்போல இருந்தது. பெரிய தீமைகளை தங்களது வாழ்நாட்களில் செய்தவர்களாக இருந்தாலும் ஒருநாள் முருகப்பெருமானுக்கு முன்பாக வருவார்களானால் தங்களுடைய தீமைகள் எல்லாம் அவரது திருக்கண் நோக்கால் நீங்கப்பெற்று முத்தியடைவர் என்பதை நாம் ஆராயவேண்டியதல்ல. ஏனென்றால் சூரபன்மன் சிவபிரானது மகன்தான் முருகப்பெருமான் என்பதை தெரிந்தும் அவரை மதியாமல் பெரும் போரைச் செய்தவன். அப்படியாகிய இவன் இப்போது முருகப்பெருமானது எல்லையற்ற திருவருளைப் பெற்று பதமுத்தியடைந்தான்.

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகிமேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்று உய்ந்தான்.

இப்போது சூரபன்மன் இறக்கவில்லை. அவனது ஆணவம் வேலாயுதத்தால் குத்திப் பிளந்து அடக்கப்படுகின்றது. இவ்வாறு அடக்கப்படுவது முத்தி வருவதற்கே என்பதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது. ஆணவமலம் தான் கெட்டது. ஆன்மாக்கள் கெட்டவர்களல்ல எப்போது ஆன்மாவிலுள்ள ஆணவம் தொழிற்படமுடியாமல் தனது சக்தி அடங்குமோ அப்போதுதான் ஆன்மா சுத்தமாகிய முத்தியைப் பெற்று சிவபோகத்தை அனுபவிப்பதை செயல்முறையில் காட்டுவதே சூரன்போராகும்.

இப்படியான நேரத்தில் முருகப்பெருமான் தமது திருக்கண்களின் பார்வையால் மெய்யறிவு பெற்று தமக்கு முன்பாக நிற்கும் பதுமனாகிய சேவற்கோழியைப் பார்த்து சேவற்கோழியே நீ இப்போது நமது தேரில் சேவற்கொடியாக இருந்து கூவுவாய் என்று கூற சேவற்கோழி உடனே பறந்து சென்று தேரிலிருந்து கொக்கரக்கோ என்று கூவி இருந்தது. பின்பு முருகப்பெருமான் சூரனாகிய மயில்மீது ஏறி இருந்து மயிலே எம்மை இன்று தொடக் கம் வாகனமாக சுமந்து திரிவாயாக என்று கூற சூரனாகிய மயில் அவரைத் தாங்கி எல்லா இடங்களுக்கும் சென்றது. இக் காட்சியைக் கண்ட பூதப்படையினரும் இலட்சத்து ஒன்பது வீரரும் முருகப்பெருமானது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி வாழ்த்தி ஆரவாரித்து அவருக்குப் பக்கமாக சுற்றி நின்றார்கள். அப்போது தேவர்கள் பின்வருமாறு முருகப்பெருமானை வாழ்த்தி வணங்குகின்றனர். முருகப்பெருமானே தாங்கள் வேலாயுதத்தை விட்டு சூரபன்மனைக் கொல்லவில்லை. அவனது ஆணவத்தை அடக்கி சூரனை மயில்வாகனமாகவும் பதுமனை சேவல் கொடியாகவும் இருந்து உமது பணிகளை செய்யும்படி வைத்தாய். இத்துடன் முன்பு நாங்கள் செய்த சிவத்துரோகமாகிய பாவத்தையும் அழித்து அதற்குக் காரணமாகிய எங்களது ஆணவத்தையும் அடக்கி எங்களையும் ஆட்கொண்டீர். இனி எங்களுக்கு ஒரு குறையுமில்லை.

*தன் துன்பத்திலும் பிறர் நலனை நினைப்பவரே நல்லோர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் தடிந்து துய்க்கும் கனைகடலின் நீர்வறப்ப
போர் தடிந்து செல்லும் புகர்வேல் தனை விடுத்து
சூர் தடிந்தாய் அன்றே தொழும் அடியேம் வல்வினையின்
வேர் தடிந்தாய் மற்று எமக்கு வேறு ஓர் குறை உண்டோ.

சூரபன்மன் 108 யுகங்கள் தேவர்களுக்கு பெரும் துன்பத்தைச் செய்தவன். தேவர்கள் இத்துன்பத்தை இப்போது சிவபிரானது திருவருட் செயலாகக் காண்கின்றனர்.

செய்யுமவனும் புலனும் செய்வித்து நிற்போனும்
எய்தவரும் பொருளும் யாவையும் நீயே என்கை
ஐயா அடியேன்கள் அறிந்தனம் அன்னதனால்
வெய்ய பவம் அகன்று வீடும் இனிக் கூடுதும்.

**மகன் இரணியன் புலம்புறு படலம்**

அப்பாவே பிள்ளைப் பிறைபுனைந்த பிஞ்ஞகன் தன் காதலனை
புள்ளிக் கலாபப் பொறிமயிலாய் போற்றும் எல்லை
எள்ளற் பொருட்டால் யான்முன் உரைத்தவற்றை
உள்ளத்திடை எந்தாய் உன்னுதியோ உன்னாயோ.

இதன்பின்பு முருகப்பெருமானால் அனுப்பப்பட்ட வீரவாகு தேவர் மகேந்திர நகரத்திலுள்ள சிறைச்சாலைக்குச் சென்று சயந்தன் முதலிய தேவர்களை சிறைச்சாலையிலிருந்து நீக்கி அவர்களை முருகப்பெருமானுக்கு முன்பாகவிட அவர்கள் எல்லோரும் முருகப்பெருமானை வாழ்த்தி வணங்கி அருள்பெற்று நிற்க முருகப்பெருமான் இவர்களுடன் திருச்செந்தூருக்கு வந்து பிரமா முதலிய தேவர்களுக்கு அவர்கள் விரும்பும் வரங்களைக் கொடுத்து தாமும் அங்கே சிவலிங்கத்தை ஸ்தாபித்து சிவபூசை செய்துகொண்டிருந்தார்.

---

**வாழ்க்கையில் ஜெயிக்க...**

*ஒருவன் தன்னுடைய தொழிலில் படு தோல்வியடைந்த நிலையில் தான் நடந்து வந்த வழியில், தெரு முனையில் போவோர் வருவோரை மிகுந்த மனவேதனையுடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது எதிரில் உள்ள குப்பைத் தொட்டியில் ஒருவர் தனக்குத் தேவையான பழைய பேப்பரை எடுத்து சாக்கில் நிரப்பிச் சென்றார். சிறிது நேரத்தில் இன்னொரு நபர் அதே குப்பைத் தொட்டியில் தனக்குத் தேவையான போத்தல்களை நிரப்பிச் சென்றார். ஒருவர் தனக்குத் தேவையான பழைய பிளாஸ்டிக் தட்டு போன்ற பொருட்களை நிரப்பிச் சென்றார். அதன் பின் ஒரு நாய் வந்து எச்சில் இலையில் இருந்த சாப்பாட்டை சாப்பிட்டுச் சென்றது. கடைசியாக வந்த ஒரு பசு குப்பையில் கிடந்த பச்சிலையைச் சாப்பிட்டு தன் பசியைப் போக்கிக்கொண்டது. இதைப் பார்த்த படு தோல்வியடைந்த அந்த நபர் கூறிய வார்த்தைகள். "ஒரு சிறிய குப்பைத் தொட்டியில் இத்தனை பேர் பிழைத்து வாழ்கிறார்கள் என்றால், இந்த பரந்து விரிந்து கிடக்கும் இவ்வுலகில் நாம் அனைவரும் எப்படி எல்லாம் பிழைத்து வாழலாம் என்று தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு இனி தனக்குத் தோல்வியே கிடையாது. இனிவரும் காலங்கள் பொற்காலமே" என்று கூறிக்கொண்டு தன் பழைய தொழிலைத் தொடங்கினான்.*

*அன்பின் வழியாகச் செய்யும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற மூத்தோர் மதிப்பளித்தல் நிகழ்வு

– **திரு க. கைலைநாதன்** அவர்கள் –

சந்நிதியான் ஆச்சிரமத்தின் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி அவர்களது ஏற்பாட்டில் சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் ஆச்சிரம மண்டபத்தில் 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணியளவில் ஓய்வுநிலை மேலதிக அரச அதிபர் திரு செ. ஸ்ரீநிவாசன் அவர்கள் தலைமையில் முதியோர் மதிப்பளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.



இந்நிகழ்வில் தலைவர் தன் உரையில் ஆச்சிரமத்தின் பணிகள் பற்றியும் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி அவர்களது அயராது அன்னப்பணிக்கு மேலாக சொல்லில் அடங்காத சேவைகளை ஆற்றி வருகின்றார் என்றும் எமது நாட்டிலே எத்தனையோ சேவை நிறுவனங்கள் இருந்தாலும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் ஆற்றப்படும் பணிகள் முதன்மையானது. அதுமட்டுமல்லாது இந்த ஆண்டு முதியோர்களை மதிப்பளிப்பதற்காக தொண்டைமானாற்றைச் சூழவுள்ள பகுதிகளைச் சார்ந்த 70 ஆண், பெண் முதலியோர்களை கௌரவிக்கும் நிகழ்வானது சிறப்புப்பெற்ற ஒன்று என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார். தலைமை உரையின் நிறைவில் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி அவர்களால் பொன்னாடை அணிவித்தும், நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து கருத்துரையினை ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பரமேஸ்வரி சிவனொளிபாதம் அவர்கள் தனது உரையில் சந்நிதியான் ஆச்சிரம பணிகள் பற்றியும் ஆச்சிரம சுவாமிகள் அவரது சேவைகள் பற்றியும் எடுத்துக்கூறி சிறுவர்கள் முதியோர்கள் எப்படி இருக்க வேண்டும். நாம் அவர்களை கட்டாயமாக பராமரிக்க வேண்டியது ஒவ்வொருவரது கடமையாகும் என்று கூறினார். அவருக்கு சுவாமி அவர்களால் பொன்னாடை அணிவித்தும் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டது.



இந் நிகழ்வில் சிறப்பு உரையாற்றுவதற்காக யாழ்ப் பாணம் தேசிய இளைஞர் மன்ற உதவிப் பணிப்பாளர் திருமதி வினோதினி அவர்கள் தனது உரையில் நான் பல சேவை நிறுவனங்களுக்குச் சென்றிருக்கின்றேன். ஆனால் எங்கும் காணாத சிறப்பு சந்நிதியான் ஆச்சிர மத்தில் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி அவர்கள்

*மனிதர்களுக்கு எந்தப் பொருளின் மதிப்பும் அது இல்லாதபோதுதான் தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு வயிற்றுப் பசியை மட்டு மல்லாது, வாழ்வாதார உதவிகள், மருத்துவ வசதிகள் போன்ற பல சேவைகளை ஆற்றுகின்றார்.



அவர் கூறும்போது இன்று வரலாறு காணாத சிறப்பை சந்நிதியான் ஆச்சிரமம் முதியோருக்கு விழா எடுத் திருக்கின்றார்கள் பாராட்டுதலுக்கு உரியதாகும். அதுமட்டுமல்லாது தனது சிறப்பான நடிப்பின்மூலம் முதியோர்களை மகிழ்வித்தார். தொடர்ந்து சுவாமி அவர்களால் பொன்னாடை அணிவித்தும் நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது.

இம் முதியோர்களை மகிழ்ச்சிப்படுத்தும் முகமாக வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனமும், வில்லிசை நிகழ்வும் இடம்பெற்றது. அற நெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக் கும் சுவாமி அவர்களால் நினைவுப் பரிசில்கள் வழங் கப்பட்டது. அதனைத் தொடர்ந்து முதியோர்களுக்கு உடுபுடவைகளும் உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டது.



அதனைத் தொடர்ந்து பளை பாடசாலைக்கு இரண்டு கணனிகள் சுவாமி அவர்களால் வழங்கப்பட்டது. இறுதியாக சுவாமி அவர்களது நன்றியுரையுடன் கூடிய முதியோர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு, பூசை வழிபாடுகளோடு விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கலோடு விழா நிறைவு பெற்றது.

**தேடிப் பெறவேண்டியது புகழ். நாடி வரவேண்டியது மரியாதை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

**01.11.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "கலைநிகழ்வு"

வழங்குபவர்கள்:- காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மாணவர்கள்

---

**08.11.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**15.11.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "ஆறுமுகமான பொருள்"

வழங்குபவர் :- திரு அ. அமுதாஸ் அவர்கள்

---

**22.11.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

---

**29.11.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் கார்த்திகை மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சி. தில்லைநாதன் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

(அதிபர்)

323ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org